பக்கங்கள் : பன்னிரண்டு + II

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 23 வியாழக்கிழமை (07.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 253

# மனித உரிமை மீறல்களைப் பேசுவதற்கு சார்க்கில் இடம் தரப்படாதது ஏன்?

## நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார் ஹக்கீம்

கொழும்பு, ஒகஸ்ட்7

இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் அரச பயங்கரவாதம் குறித்தும் சார்க் நாடுகளின் தலைவர்கள் பேசுவதற்கு ஏன் இங்கு நடைபெற்ற உச்சி மாநாட்டில் இட மளிக்கப்படவில்லை;

இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார் முஸ்லிம் காங்கிரஸ் (12ஆம் பக்கம் பார்க்க)

**புலமைப்பரிசில் பரீட்சை விசேட மாதிரி வினாத்தாள்**

கொழும்பு மாவட்டம் பிரபல ஆசிரியர்

**திரு.எஸ்.ஏ.சந்திரபவன்**

தயாரித்தது

உள்ளே I + II ஆம் பக்கங்களில்


## நாயாறுப் பகுதியில் குண்டு வீச்சு 18 பொதுமக்கள் காயமடைந்தனர்

வவுனியா, ஒக.7

முல்லைத்தீவின் நாயாறு மற்றும் உடுப்புக்குளம் பகுதிகளில் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது அரச வான்படை நடத்திய, குண்டுத்தாக்குதலில் வீடுகளும் கடைகளும் அழிந்துள்ளதுடன் பொதுநோக்கு மண்டபம் ஒன்றும் சேதமாகியுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வா! வா! முருகா!! வெளிவீதி வந்து அருள் தா தா! முருகா!



சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று முற்பகல் கொடியேற்றத்துடன் முந்திய காலங்களைப் போன்று, பக்தி வெள்ளம் பாய்ந்தோட மக்கள் பரவசமடைய ஆரம்பமாகியது.

2006 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களைப் போலவே கொடியேற்ற வேளையில் பக்தர்கள் வெள்ளம் ஆலயத்திலும் அதன் சூழலிலும் கரைபுரண்டோடியது.

மாலையிலோ, வேற்பெருமானும் வள்ளி தெய்வானையும் வெளிவீதி வலம் வந்து அடியார்களின் கடந்த இரு வருடத்திய ஆதங்கத்தைத் தீர்த்து வைத்தனர்.

குடா நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் முருகன் மயில் மீதமர்ந்து அளித்த கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு பேருவகை கொண்டனர். உள் வீதியிலிருந்து கந்தசுவாமிக் கடவுள் வெளியே புறப்படும் காட்சியையே மேலே காண்கிறீர்கள்.

[படங்கள்: லக்ஷ்மன்]

## விடுதலைப் புலிகள் தாக்கியதில் அரிப்பில் 'ஹெலி' அவசரமாக தரை இறக்கம்?

கொழும்பு, ஒக.7

மன்னார் அரிப்புப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த விமானப்படையினரின் 'எம்.வை 17' ரக ஹெலிகொப்டர் ஒன்று அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் குறித்த ஹெலிகொப்டர் மீது தாங்கள் நடத்திய தாக்குதலை அடுத்தே அது தரையிறக்கப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனிக்குளம் மோதலில் கொமாண்டோக்கள் 20பேர் பலி; 5 பேர் படுகாயம் எனத் தகவல்

கொழும்பு, ஒக.7

வவுனிக்குளத்தில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை மல்லாவி நோக்கிப் படையினர் மேற்கொண்ட முன்னகர்வு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் கொல்லப்பட்ட - காணாமல் போன படையினரின் எண்ணிக்கை 25 என்ற தகவல், படையினரின் ஆய்வுத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. தொப்பிக்கல தரவையில் இராணுவ 'ட்ரக்' மீது கிளைமோர்!

### 23 படையினர் உயிரிழப்பு என்கின்றனர் புலிகள்

மட்டக்களப்பு, ஒக.7

மட்டக்களப்பு தொப்பிக்கல தரவைப் பகுதியில் - பெரியவட்டுவான் என்ற இடத்தில் இராணுவத்தினர் பயணம் செய்த 'ட்ரக்' ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

அந்தத் தாக்குதலில் 23 படையினர் உயிரிழந்தனர் என்றும் நான்கு பேர் காயமடைந்தனர் என்றும் தமிழீழ விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்க்' பாதுகாப்பில் குறை; இந்தியத் தூதரகம் விசனம்

கொழும்பு , ஒக.7

'சார்க்' உச்சி மாநாட்டிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் சிலவற்றில் கடுமையான குறைபாடுகள் காணப்பட்டன என்று செய்திக் குறிப்பொன்றில் விசனம் தெரிவித்துள்ள கொழும்பிற்கான இந்தியத் தூதரகம் இது குறித்து, இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகள் மன்னிப்புக் கேட்டனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனுக்கு 15 ஆவது 'சார்க்' உச்சி மாநாட்டின்போது வழங்கப்பட்ட பாதுகாப்புக் குறித்து வெளியான பல (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் யுத்தத்துக்கு இறுதிப் பலாபலன் கிடைக்கும் நாள் நெருங்கி விட்டதாம்

### நாடாளுமன்றத்தில் பிரதமர் ஆரூடம்

கொழும்பு, ஒக. 07

புலிகளை முற்றாகத் தோற்கடிக்கும் அர சின் யுத்த நடவடிக்கைக்கு இறுதிப் பலா பலன்கள் கிடைக்கும் நாளும் வடக்கில் ஜனநாயகம் மலரப்போகும் நாளும் நெருங்கிவிட்டன என்று பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இந்த வெற்றியைத் தடுப்பதற்காக புலிகளின் நண்பர்கள் சிலர் முயற்சி செய்து வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

அவசரக்காலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (12ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைக்கேணியில் நேற்று ஷெல் தாக்குதல் பொதுமக்கள் இருவர் பலி; வீடுகள், படகுகள் சேதம்

கொழும்பு, ஒக.7

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக் கேணிப் பகுதி மீது நாகர் கோவில் இராணுவ முன்னரங்க நிலைகளில் இருந்து நேற்றுக் காலை 8. 45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் பொது மக்கள் இருவர் கொல்லப்பட்டனர். ஒருவர் படுகாயமடைந்தார். பல வீடுகளும் கடற்றொழில் படகுகளும் சேதம் அடைந்தன.

இராணுவத்தினர் ஏவிய ஷெல்கள் மக்கள் குடியிருப்புகள் மற்றும் வாடி வீடுகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மடுமாதா திருச்சொரூபம் அடுத்தவாரம் பிரதிஷ்டை

### எனினும் வருடாந்த உற்சவம் நடைபெறாது

கொழும்பு, ஒக.7

மடுமாதாவின் திருச்சொரூபம் அடுத்த வாரமளவில் - 15ஆம் திகதிக்கு முன்னதாக- தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுமெனவும் இணையத்தளமொன்றிற்குத் தெரிவித்துள்ள மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோஸப் ஆண்டகை எனினும் வருடாந்த உற்சவத்தினை நடத்துவதற்கான சூழ்நிலை

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தனியார் துறையினருக்கு அரச அதிபரூடாக 3,800 மெ.தொன் சிமெந்து எடுத்துவரப்படுகிறது

'றுகுணு'க் கப்பல் மூலம் 3 ஆயிரத்து 800 மெற்றிக் தொன் சிமெந்து குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட உள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலை தெரிவித்தார்.

சிமெந்து விநியோகம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டுக்கு இதற்கு முன்னர் 'ஜால' கப்பல் மூலம் 32 ஆயிரம் பைக்கெற் சிமெந்து எடுத்துவரப்பட்டிருந்தது.

அபிவிருத்தி வேலைகளின் பொருட்டு கட்டட வேலைகளைச் செய்து வரும் ஒப்பந்தகாரர்களுக்கு சம்பந்தப்பட்ட திணைக்களகங்களின் சிபார் சுடன் சிமெந்து விநியோகிக்கப்பட்டது.

இப்போது உலகவங்கியின் வீட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கான சிமெந்து பிரதேச செயலாளர்கள் ஊடாக வழங்கப்படுகின்றது.

எனவே யாழ்.மாவட்ட செயலகத்தால் எவருக்கும் சிமெந்து விநியோகத்துக்கென உத்தரவுப்பத்திரம் விநியோகிக்கப்படுவதில்லை. ஆகையால் சிமெந்து அனுமதிப்பத்திரம் கேட்டு செயலகத்துக்கு வரவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

ராஜன் ஹாட்வெயர் நிறுவனம் 3 ஆயிரம் பைக்கெற்றுகளும் மற்றும் மாவடியான் றேடேர்ஸ், செல்லப்பிள்ளையார் நிறுவனம், தரன் ஹாட்வெயர்ஸ், கஜமுகன் ஹாட்வெயர்ஸ், நாராயணன் ஹாட்வெயர்ஸ்' ஆகியன தலா 5 ஆயிரம் பைக்கெற்றுக்களையும் மதுஷன் ஹாட்வெயார்ஸ் 4 ஆயிரம் பைக்கெற்றுக்களையும் 'ஜால' கப்பலில் எடுத்துவந்துள்ளன - என்று உள்ளது. (அ-1)

---

உ
சிவமயம்

## நீங்காத நினைவுடன் நிலைத்த ஏழாண்டு நினைவுகள்



அன்னை மடியில்: 07.01.1940
குமரன் அடியில் : 26.07.2001

அமரர்
**வைரமுத்து வரப்பிரசிங்கம்**
*(ஓய்வுபெற்ற அஞ்சலக ஊழியர். தெல்லிப்பழை)*
*திதி: ஆடி பூர்வபக்க சஷ்டி 07.08.2008*

அன்பால் அறிவூட்டி எங்களை பாசமுடன் வளர்த்த அன்புத் தந்தை
எங்களை விட்டுப் பிரிந்து சென்று ஏழாண்டுகள்
ஓடி மறைந்ததே அப்பா எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில்
வேரூன்றி நிற்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திப்போமாக.

நி.மு:கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
த.மு :களையோடை, கண்ணகி அம்மன் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.

உங்கள் நினைவில் தினம்வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை. (77002)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு: 16.04.1943

உதிர்வு: 08.07.2008

**கதிரவேலு அப்பாத்துரை,**
(விநாயகா லொறி உரிமையாளர், இரத்தினம் லைற்)

*அன்பின் உறைவிடமாய் பொறுமையின் சிகரமாய்
எம்குடும்பத்தின் ஒளிவிளக்காய் உயர்வின் ஏணியாய்
நின்றெமை யரவணைத்து நிம்மதி தந்தவரே என்றும் உம்
சாந்திக்காய் ஏத்துவோம் வழிபாடு.*

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (07.08.2008) வியாழக்கிழமை மு.ப.11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய் மத்தி, கோப்பாய். (77009) குடும்பத்தினர்.

---

## யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

**அரைகோப்பு பாரவூர்திகள் மற்றும் பதிவு செய்யப்படாத பாரவூர்திகளினை பதிவு செய்தல்**

எமது பாரவூர்தி சங்கத்தின் பதிவுகள் மட்டுப்படுத்தப்பட இருப்பதனாலும், துறைமுக தொடரணிச் சேவை புதிய பட்டியல் வழங்க இருப்பதனாலும் சங்கத்தில் பாரவூர்திகளை பதிய விரும்பும் உரிமையாளர்கள் தங்கள் பாரவூர்திகளை எதிர்வரும் 09.08.2008ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தவறும் பட்சத்தில் எதிர்காலங்களில் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றோம்.

குறிப்பு: சங்க பதிவிலுள்ள மணல் சேவையில் ஈடுபடும் அரை கோப்பு பாரவூர்திகள் அனைத்தும் தங்கள் பதிவினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

215, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (சி/554064)
நிர்வாக சபை, யா.மா.த.பா.உ.கூ.சங்கம்.

---

## ராஜா 2 யாழ்ப்பாணம்



60 ஆவது நாளை நோக்கி
4முதல் 9 வரை சகல
வகுப்புகளுக்கும் அரைக் கட்டணம்
கமல்ஹாசன், அசின்
**தசாவதாரம்**
காட்சிகள் 10.30–2.00

---

## ஆட்டுக்கடா விற்பனைக்கு

ஆட்டுக்கடா ஒன்று விற்பனைக்குண்டு.
தொடர்பு: ஸ்ரீ முருகன் களஞ்சியம்
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
(சி/554057)

---

## தவறிவிட்டது

PRIDE & PREJUDICE NOTES என்னும் புத்தகம் 05.08.2008 அன்று சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. S.T.Godwin என பெயரிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணத்தில் அல்லது சீறா ரெலிகொம், சுன்னாகத்தில் ஒப்படைத்துதவவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(76999) அ.செபரெட்ணதாஸ்.

---

## தேவை

எமது பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு கணக்காய்வுப் பயிலுனர்கள், பியோன் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.இல.: 021 222 2478 0779530496

---

## விற்பனைக்கு

6:2, 4:3, 4:2 பழைய தீராந்திகள், 4:3 முதிரை 4 அடிக்கு உட்பட்ட புதிய தீராந்திகள், தேக்கம் பலகை, 4 அடிக்கு உட்பட்ட வேம்பு, பலா பலகைகள் மற்றும் நல்ல இன ஆடும் குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சே.கிருஷ்ண குமார், விதானைவளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய். தொ.பே: 021 2227802

---

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருங்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி
உலக இரட்சகரான [illegible]யேசுவே
நீசப்பாவிச [illegible]ம்மல்
அளவில்லா இரக்கம் உள்ளவரே
முடியாத காரியங்களை
கைகூடப் பண்ணியவரே
எங்கள் இயேசுவே
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

-அடியாள்.

---

### பழைய மாணவர் சங்க கூட்டத்தொடு கிரிக்கெட் போட்டி

வலி.வடக்கு, ஓக 7

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கவருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் நா. கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் பழைய மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையேயான கிரிக்கெட் போட்டியொன்றும் நடைபெறவுள்ளது.

### றோட்டறிக்கழகத்தில் விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 7

றோட்டறக்ட் மற்றும் றோட்டறிக் கழக உறுப்பினர்களுக்கான விசேட கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

சகல உறுப்பினர்களும் [illegible] ளுமாறு றோட்ட றிக் கழகத் தலைவா கேட்டுள்ளார்.

---

## புவியியற் கழகம் நடத்திய அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பின் அதிர்ஷ்ட இலக்கங்கள்

| | |
|---|---|
| ⇨ முதலாம் பரிசு | 8570 |
| ⇨ இரண்டாம் பரிசு | 1122 |
| ⇨ மூன்றாம் பரிசு | 2066 |

ஆறுதல் பரிசுகள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 1)7237 | 2)3237 | 3)5045 | 4)2411 | 5)4852 |
| 6)3863 | 7)6609 | 8)5632 | 9)7912 | 10)7870 |

அதிர்ஷ்டசாலிகள் 15.08.2008 இற்கு முன் தமது பரிசுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளவும்.

பரிசில்களை அன்பளிப்பாக வழங்கி எமக்கு ஆதரவு வழங்கிய அனைத்து வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(77006) புவியியற் கழகம், புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்த எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

### முதுகலைமாணி பிரதேச திட்டமிடல் கற்கைநெறி

1. திரு.பா.செந்தில்நந்தனன் *(பிரதேச செயலர், நல்லூர்)*
2. திரு.ம.பிரதீபன் *(திட்டப்பணிப்பாளர்)*
3. திருமதி இ.மோகனேஸ்வரன் *(உதவித் திட்டமிடல் பணிப்பாளர்)*

### முதுகலைமாணி குடித்தொகை அபிவிருத்தி கற்கைநெறி

1. திரு.எஸ்.சண்முகரட்ணம் *(பிரதம கணக்காளர்)*
2. திருமதி குலரஞ்சினி சாந்தகுமார் *(அபிவிருத்தி இணைப்பாளர்)*

யாழ்.செயலக அன்பு உள்ளங்கள்.

---

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் கனகசபை (கணேசு)



{ஓய்வுபெற்ற உதவி வைத்திய உத்தியோகத்தர் (R.M.P)}

பூதர்மடத்தடி, கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் "ரதிஸ்தான்" புகையிரத நிலைய வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய வல்லிபுரம் கனகசபை நேற்று (06.08.2008) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (M.S) - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்ரீரதியின் அன்புக் கணவரும், ஸ்ரீநந்தினி, நாகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சபாநாதனின் (சுங்க இலாகா) அன்பு மாமனும், பூதர்மடத்தடியைச் சேர்ந்த செல்வரத்தினம் (துரை) அவர்களின் அன்புச் சகோதரரும், நீலவர்ணன், கிருஷ்ணவேணி ஆகியோரின் பெரிய தந்தையாரும், தெய்வானைப்பிள்ளையின் மைத்துனரும், சுலோச்சனா, சியாமளன், சசிவர்ணன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மல்ர்ச்சாலையில் இன்று (07.08.2008) வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் பி.ப.4 மணிக்கு பொரளைகனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

கொழும்பு முகவரி
No-06, H, Block,Ground Floor,
Bampalapitiya Flats,
Colombo - 04.
T.P. 0112 - 502224, 0773 - 580443

தகவல்:
வ.செல்வரத்தினம் (துரை - சகோதரர்).
பூதர்மடத்தடி கோப்பாய்.

---

## Vacancy

### Post of Technical Officers & Site Supervisors

We are looking for a committed, creative and energetic individual to join us as a Technical Officers & Site Supervisors.

**Essential qualifications & Experience:**


- NCT in Civil Engineering in the relevant field.
- For Technical Officer minimum 10 Years experience and for Site Supervisor minimum 5 Years experience in the NGO/ Public/ Private sector with sound knowledge in Building Construction.
- Good Knowledge in Auto Cad is preferable.

Please Note:

- Closing date for the applications will be on 12th August 2008.
- The above position would be initially for a period of one year with 6 months probation.
- Applicants who are living in Point Pedro area are encouraged to apply.
- Candidates who do not possess the required qualifications are advised to refrain from making applications.
- Only short listed candidates will be called for the interview.
- Canvassing will be treated as a disqualification.
- Please submit your CV to the address given below and indicate the post applied for on the top left hand corner of the envelope.

District Director,Sewa Lanka Foundation,
#250, Temple Road,Nallur, Jaffna.
Tel. 021-222 8361, 021-222 9850
Fax No. 021-222 9850 Email: jaffna@sewalanka.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
கொடியேற்றம் இடம்பெறுவதை முதலாவது படத்திலும் அடியார்கள் அங்கப்பிரதிஷ்டை செய்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். ஆலயத்திற்கு வருகை தந்திருந்த அடியார்களில் ஒரு பகுதியினர் ஆலய முன்றிலில் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோசத்துடன் நல்லையில் கொடியேறியது

யாழ்ப்பாணம்,ஓக.7

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோசத்துடன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆலயப் பெருந்திருவிழா நேற்று ஆரம்பமானதையிட்டு அதிகாலை 4.30 மணிக்கே பக்தர்கள் ஆலயத்தில் பெருமளவில் கூடியிருந்தனர்.

பெருமளவான பக்தர்கள் பிரதட்டை அடித்தும் அடி அழித்தும் தமது நேர்த்திக் கடன்களைச் செய்தனர்.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து ஆலய உள்வீதியில் சுவாமி வீதியுலா இடம்பெற்றது. உள்வீதியில் பெரும் நெரிசல் காணப்பட்டது.

அடியார்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஆலயச் சூழலில் யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. குறிப்பாகக் குடிதண்ணீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

திருவிழாவை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகளில் மாநகர சபை ஊழியர்கள், தொண்டர்களுடன் பாதுகாப்புப் படையினரும் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (203-111)

## சின்னமடுத் திருவிழாவில் பெருந்திரளான பக்தர்கள்

யாழ்ப்பாணம்,ஓக.7

சின்னமடுமாதா யாத்திரை திருவிழா நேற்றுமுன்தினம் சிறப்புற நடைபெற்றது. இவ்விழாவில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

கடந்த 27ஆம் திகதி முதல் இடம்பெற்ற திருப்பலி நிகழ்வின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

திருவிழாவிற்கு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பிரதேச செயலகத்தினர் மற்றும் கடற்படையினரும் பூரண பங்களிப்பை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-95)

## நெற்செய்கையாளர்களுக்கு பசளை விநியோகம்

கெருடாவில்,ஓக.7

வடமராட்சி, புலோலி, அம்பன் ஆகிய கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட நெல் உற்பத்தியாளர்களுக்குப் பசளை விநியோகிக்கப்படவுள்ளது.

பசளை தேவைப்படும் உற்பத்தியாளர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பிரிவு கமக்கார அமைப்புகளில் பதிவுசெய்து கொள்ளுமாறு கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் உருத்திரேஸ்வரன் கேட்டுள்ளார். (202)

## 'சிஎச்ஏ' நிறுவனம் கற்றல் உதவி

யாழ்ப்பாணம்,ஓக.7

அல்லைப்பிட்டியில் 2006 ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற அனர்த்தத்தினால் பெற்றோரை இழந்த 3 மாணவர்களுக்கு சி.எச்.ஏ. நிறுவனம் கற்றல் உதவியை வழங்கவுள்ளது.

இத்தகவலை நிறுவனத்தின் பதில் இணைப்பாளர் ஜே.ஏ.அனுஷ்மன் தெரிவித்தார்.

கற்றல்செலவுக்கானநிதி, உடுபுடைவை, கற்றல் சாதனங்கள் என்பன அடுத்த வாரமளவில் நிறுவனத்தில் வைத்து வழங்கப்படும்.

அதே குடும்பத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களுக்கு தையல் பயிற்சி வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் சிபார்சிற்கமைவாக கொக்குவிலைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 14ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகள், மேசைகள் வழங்கப்பட்டுள்ளன. (202-302)

## நயினாதீவு வெள்ளடை வீதி மீள் புனரமைத்துத் திறப்பு

யாழ்ப்பாணம்,ஓக.7

நயினாதீவில் 50 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைப்பு இன்றியிருந்த "வெள்ளடை வீதி" புனரமைப்புச் செய்யப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் புதிய வீதியைத் திறந்துவைத்தார்.

வேலணை பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தலைமையில் விழா இடம்பெற்றது. நயினாதீவு - மகா வித்தியாலய வீதி மீள்புனரமைப்புக்காக பிரதம அதிதியால் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது. நயினாதீவு செல்லம் முன்பள்ளி, கணேசா முன்பள்ளி, அம்பிகா முன்பள்ளி, அண்ணா முன்பள்ளி மாணவர்கள் கோலாட்டம், காவடியாட்டம், பாட்டு, நடனம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளை மேற்கொண்டனர். (202-95)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## தென்மராட்சியில் சிறுதானியப் பயிர்கள் பன்றிகள், காகங்களால் நாசம்

யாழ்ப்பாணம்,ஓக.7

தென்மராட்சியில் சிறுதானியப் பயிர்கள் பன்றி மற்றும் காகங்களால் அழிவடைதாக உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கச்சான், குரக்கன், கிழங்கு ஆகியவையே பெருமளவில் அழிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறுதானியம், கச்சான் மற்றும் கிழங்குச் செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பன்றி மற்றும் காகங்களால் பெரிதும் பாதிப்படைவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரக்கன், கச்சான், வற்றாளைக் கிழங்கு, மரவள்ளி போன்றன தென்மராட்சி வயல்களில் நன்றாக விளைந்துள்ளன. இந்நிலையில் இரவில் வயல்வெளிகளில் நுழையும் பன்றிக் கூட்டம் அவற்றைத் தின்று அழித்து விடுகின்றன. அதுமட்டுமல்லாமல் விளைந்த கச்சானை கூட்டமாக வரும் காகங்கள் கொத்திக் கிளறிச் சாப்பிடுகின்றன.

இதனால் விவசாயிகள் இரவில் தோட்டங்களில் காவல் காத்து வருகின்றனர். வயல்களில் சிறிய கொட்டில்கள் அமைத்து, பறண்கள் கட்டி, அதன்மேல் இரவில் தங்கிக் காவல் காத்து வருகின்றனர். பன்றிக் காவலுக்காக இரவில் வயல்களில் மரக்குற்றிகளை நெருப்பில் பற்றவைத்து அதனை நாட்டி வயல்களில் வெளிச்சத்தை பரப்பி வருகின்றனர்.

சிலர் கை லாம்புகளை பற்றவைத்து வெளிச்சம் பரப்பி வருகின்றனர். (202-131)

## பருத்தித்துறையில் திருவிழாக் காலங்களில் மட்டும் ஆலயங்களில் ஒலிபெருக்கி பயன்படுத்தலாம்

வடமராட்சி,ஓக.7

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆலயங்களில் திருவிழாக் காலத்தில் மட்டுமே ஒலி பெருக்கியைப் பயன்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆலயங்களில் பெரும் ஓசையுடன் ஒலிபெருக்கிகளை பயன்படுத்துவதால் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஒலிபெருக்கி ஓசை இடையூறாக இருப்பதாகப் பிரதேச செயலகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆலயங்களில் ஒலி பெருக்கியைத் தொடர்ந்து பயன்படுத்தாது திருவிழாக் காலங்களில் மாத்திரம் பயன்படுத்துமாறு பருத்தித்துறைப் பிரதேச செயலகம் வெளியிட்டுள்ள குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-236)

## தொண்டைமானாறு, பொலிகண்டி பிரதேசங்களில் வீடமைப்பு

வடமராட்சி,ஓக.7

தொண்டைமானாறு தெற்கு, பொலிகண்டி கிழக்கு ஆகிய இரு கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் வீடுகள் அற்ற 45 குடும்பங்களுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தினால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா மூன்று லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகள் இத்திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

தலைமைப்பீடத்தின் அனுமதி கிடைத்ததும் இவ்வீடமைப்புத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-236)

## சாவகச்சேரியில் இலவச தொழிற்பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.7

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்த யுவதிகளுக்கான இலவச கேக் ஐசிங், மணப்பெண் அலங்காரம் ஆகிய பயிற்சி நெறியினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் யுவதிகள் சாவகச்சேரி நவீன சந்தை 'விமலாஸ்' வர்த்தக நிறுவனத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு கழகச் செயலாளர் லயன் செ.கா.நவரத்தினம் கேட்டுள்ளார்.

கழகத்தினால் ஏற்கனவே இரு தொகுதியினருக்கு பயிற்சிநெறிகள் நடத்தி பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (202-205)

## ஆனைக்கோட்டையில் தரிசு-நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளலாம்

நவாலி,ஓக.7

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் செய்கை பண்ணப்படாமல் தரிசு நிலமாக இருக்கும் - குறிப்பாக வெளிநாடுகளிலிருப்பவர்களின்- சொந்தக் காணிகளில் காணி இல்லாதவர்கள் இனி மேல் நெற்செய்கையை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவித்தலை ஆனைக்கோட்டை உயரப்புலம் விவசாய சம்மேளனமும் ஆனைக்கோட்டை கிராமசேவையாளர் வை.சந்திரராசாவும் விடுத்துள்ளனர். (202-100)

## கற்பிப்பதற்கு புதிய உத்திகளைக் கையாண்டு மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கவேண்டும்

### மூதறிஞர் சிற்பி ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஓக.7

ஆசிரியர்கள் கற்பிப்பதில் புதிய புதிய உத்திகளைக் கையாளவேண்டும். மாணவர்களது ஈடுபாட்டை அதிகரித்து ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் கற்பிக்க வேண்டும். மாணவர்கள் அறியவேண்டும் என்று துடிக்கின்ற விடயங்களை ஆசிரியர்கள் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்கவேண்டும். தெரியாவிடின் தேடியறிந்து சொல்லிக் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு மூதறிஞர் சிற்பி சிவசரவணபவன் ஆலோசனை தெரிவித்தார்.

சு.ஸ்ரீகுமரன் எழுதிய 'செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்' நூலின் வெளியீட்டு விழா பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோது, நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:

விளங்கிக் கொள்வதற்குச் சிரமமான விடயங்களில் புதுப்புது உத்திகளைப் பயன்படுத்தி விளங்க வைக்கும் ஆற்றல் சிறந்த ஆசிரியரிடத்தில் உள்ளது. ஸ்ரீகுமரன் கல்வித் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவராகவும் கற்பனை வளம் மிகுந்த படைப்பாளியாகவும் இருப்பதால் புதிய புதிய உத்திகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு நல்ல கருத்துக்களை எடுத்துக் கூற வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் இந் நூலைப் படைத்துள்ளார். மாணவர்கள் மட்டுமன்றி பெரியவர்களும் அறிய வேண்டிய பல விடயங்கள் இந்நூலில் உள்ளன - என்றார்.

மதிப்பீட்டுரை வழங்கிய யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

சிறுவர் இலக்கியம் தமிழ்ச் சூழலில் குறைவாகவுள்ளது. ஈழத்தில் அது மிக அருந்தலாக உள்ளது. நமது சிறுவர் சிறுமியரை அறிவுபூர்வமாக மேம்பாடு காண வைக்கும் முயற்சிகளும் அவர்களை வளமாக்கும் செயற்பாடுகளும் மிகக் குறைவாகும். அவ்வகையில் ஈழத்துச் சிறுவர் இலக்கிய வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய காத்திரமான படைப்பாக இந்நூல் அமைந்துள்ளது - என்றார்.

பாடசாலை அதிபர் திருமதி கி.சிவராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் ஆ.சி.நடராஜாவும் உரையாற்றினார். (202-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராம ஜெயம்

# பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தான
## சர்வதாரி வருஷ ஆவணி மாத
## திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம்

### விஷேட உற்சவ தினங்கள்

கொடியேற்றம்: ஆடி மாதம் 24ஆம் நாள் (08.08.2008) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.05 மணி

சப்பறத்திருவிழா: ஆடி மாதம் 28ஆம் நாள் (12.08..2008) செவ்வாய்க்கிழமை மாலை 5மணி

வரலட்சுமி விரத நூல் கட்டுதல்: ஆடி மாதம் 31ஆம் நாள் (15.08.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

மஞ்சத்திருவிழா: ஆவணி மாதம் 01ஆம் நாள் (17.08.2008) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி

அனந்த சயனத் திருவிழா: ஆவணி மாதம் 04ஆம் நாள் (20.08.2008) புதன்கிழமை காலை 8.00 மணி 1008 சங்காபிஷேகம், சயனஉற்சவம்

வேட்டைத்திருவிழா: ஆவணி மாதம்07ஆம் நாள் (23.08.2008) சனிக்கிழமை மாலை 5 மணி

தேர்த்திருவிழா: ஆவணி மாதம் 08ஆம் நாள் (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை உதயம் 1008 சங்காபிஷேகம் பூஜை, காலை 10.00 மணி வசந்தமண்டபப் பூஜை முற்பகல் 11.30 மணி தேரில் எழுந்தருளல், பி.ப. 1.30 மணி உறியடி உற்சவம் இரவு 10.30 மணி கிருஸ்ண ஜெயந்தி அபிஷேகம், பூஜை, உற்சவம், தாலாட்டு, பஜனை

தீர்த்தத்திருவிழா: ஆவணி மாதம் 09ஆம் நாள் (25.08.2008) திங்கட்கிழமை காலை 9.00 மணி திருவடிநிலைக்கு புறப்படல், முற்பகல் 11.00மணி தீர்த்தோற்சவம் மாலை 4.00 மணி கொடியிறக்கம்

திருக்கல்யாணம்: ஆவணி மாதம் 10ஆம் நாள் (26.08.2008) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி சங்காபிஷேக உற்சவம் மாலை 2.30 மணி திருக்கல்யாண உற்சவம்

ஆஞ்சநேயர் பொங்கல் உற்சவம்: ஆவணி மாதம்29ஆம் நாள் (14.09.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00மணி சங்காபிஷேகம், பூசை, உற்சவம்

தேவஸ்தான உற்சவ பிரதம குரு: "கிரியா வித்தகர்" "வேதாகம ஞானதிவாகரன்" "கிரியாபாநு"

ஸ்ரீவிஸ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தாச்சாரியார்.

பொன்னாலை, சுழிபுரம். **தேவஸ்தான பரிபாலன சபை.**

# ROAD DEVELOPMENT DEPARTMENT - JAFFNA
## INVITATION FOR BIDS

1. The Chairman Regional Procuring Committee on behalf of the Road Development Department, Northern Province invites sealed bids from eligible and qualified bidders for repair of the following roads.

| S.I | Description of work | ICTAD | Non-refundable Tender Deposit | Refundable Tender Deposit |
|---|---|---|---|---|
| 01. | Urgent Repairs to Thirunelvely Puttur Road 0-10th km | M7 | 750/- | 10,000/- |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award the successful bidder shall not have been blacklisted and shall meet the requirements as mentioned above.
4. Interested bidders may obtain further information from Chief Engineer's Office, Road Development Department, Jaffna and inspect the bidding documents at the address given below from 8.30 A.M to 4.15 P.M during working days.
5. A complete set of bidding documents in English Language may be purchased by interested bidders, on the submission of a written application to the Chief Engineer, Road Development Department, Jaffna from 07.08.2008 until 21.08.2008 from 900hrs to 1500 hrs upon payment of Non-refundable fee as mentioned above. The method of payment will be by cash.
6. Bids shall be delivered to the address below at Chief Engineer's Office, Road Development Department, Jaffna on or before 10.30 A.M on 22nd August, 2008. Late bids will be rejected. Bid will be opened soon after closing in the presence of the bidders representatives who choose to attend.

**Eng.S.P.Sivanesan**
**Chief Engineer,**
**Chairman Procurement Committee,**
**Road Development Department,**
**Jaffna.**
**07.08.2008**

(C/554061)

# மரண அறிவித்தல்
## திருமதி யசோதரன் கேதீஸ்வரி (கேதா)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யசோதரன் கேதீஸ்வரி அவர்கள் நேற்று (06.08.2008) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் யசோதரனின் பாசமிகு மனைவியும் அபிசாயினியின் பாசமிகு தாயும் துஷ்யந்தன், காலஞ்சென்ற சுகிர்தாதேவியின் அன்பு மருமகளும் கனசபாபதி - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் பாலகெங்கன், பாலவிசாகன், பாலசபேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மைதிலி (உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), மாலினி, காலஞ்சென்ற மயூதரன், சிவதர்சனன் (கிளை முகாமையாளர், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), குகதாசன் (சமுர்த்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் கீர்த்தனா, துவஸ்ரா ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.08.2008) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.* *(77000)* *கணவர் -* **து.யசோதரன்.**

# சார்க் செலவுகளை ஈடு கட்டவே 'மின்குமிழ் வரி' என்கிறது ஐ.தே.க.

கொழும்பு,ஒக.7

கையடக்கத் தொலைபேசி, பெற்றோல், வாகனங்கள் மற்றும் மின்குமிழ்கள் போன்றவற்றிற்கு விதிக்கப்பட்டிருக்கும் சுற்றாடல் பாதுகாப்பு வரியை ஐ.தே.கட்சி கடுமையாக எதிர்த்துள்ளது.

"சார்க்" மாநாட்டுக்குச் செலவிடப்பட்ட கோடிக்கணக்கான ரூபா பணத்தை மீளப் பெறுவதற்காகவே அரசு இந்த வரி விதிப்பை நாடாளுமன்றிற்குக்கூட அறிவிக்காமல் மேற்கொண்டுள்ளது என்று அக்கட்சி நேற்று முன்தினம் நாடாளுமன்றில் குற்றஞ் சாட்டியது.

நாடாளுமன்றில் இடம்பெற்ற 'கடல் சார் தீழ்ப்புத் தடைச் சட்ட மூலம்' மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேராவே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நாடாளுமன்றிற்குக்கூட தெரிவிக்காமல் அரசு இந்த வேலையைச் செய்துள்ளது. இதை நாம் வரவேற்கமாட்டோம். சுற்றாடல்துறை அமைச்சை அரசுக்கு பணம் சம்பாதிக்கும் அமைச்சாக அரசு மாற்றக் கூடாது.

40 வோல்ட்டுக்கும் மேற்பட்ட மின்குமிழ்கள் பாவிக் கக்கூடாது என்றால் அதன் பாவனைக்குத் தடை விதிக்கலாம். ஆனால், வரி விதிக் கக்கூடாது. வரிவிதிப்பின் ஊடாக இந்த வகை மின்குமிழ்களின் பாவனைகள் நிறுத்தப்படும் என்று அரசு நினைக்கக் கூடாது

'சார்க்' மாநாட்டுக்காக அரசு கோடிக் கணக்கான ரூபா பணத்தைச் செலவு செய்துவிட்டது. அந்தப் பணத்தை மக்களிடமிருந்து பெற நினைத்தே அரசு இந்த வரிவிதிப்பை மேற்கொண்டுள்ளது. இதை நாம் வரவேற்கமாட்டோம் - என்றார். (சி)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1008 நீலம்

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் **04 28 32 48**

**05-08-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 4000000 - 4016157

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 354,035 | 10/- | 3,540,350/- |
| 2 இலக்கங்கள் | 32,489 | 20/- | 649,780/- |
| 1 இல. + லக்கினம் | 32,232 | 30/- | 966,960/- |
| 2 இல. + லக்கினம் | 2,952 | 100/- | 295,200/- |
| 3 இலக்கங்கள் | 860 | 500/- | 430,000/- |
| 3 இல. + லக்கினம் | 74 | 5,000/- | 370,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,752,290/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 422,652 | | 7,252,290/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,790,850/-

தொடர் இல. 5878755 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 ஆகஸ்ட் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| காலி | 4012434-2-30 |
| கொழும்பு | 4015628-4-19 |
| கம்பஹா | 4014646-1-29 |
| மாத்தளை | 4005076-7-86 |
| புத்தளம் | 4001517-8-68 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்குப் பொருத்தமான இக்ராட் (ICTAD) M9 ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக்காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 06.08.2008 - 13.08.2008 பி.ப. 2மணிவரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 14.08.2008 நண்பகல் 12 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 14.08.2008 பி.ப. 2மணி
   (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப் பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு *செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, தலைமையலுவலகம், மானிப்பாய்* என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியிலோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்ட தற்கமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும். ஒரு பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
6. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

| இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்வி பத்திரப் பணம் | Vat வரி 15% |
|---|---|---|---|---|
| 1 | தலைமை அலுவலகக் கட்டட புனரமைப்பும் திருத்தமும் | 4500.00 | 500.00 | 75.00 |
| 2 | மானிப்பாய் மத்திய மருந்தக வீதி புனரமைப்பு - ஆனைக்கோட்டை | 7000.00 | 500.00 | 75.00 |
| 3 | லீலா பேக்கரி முன் ஒழுங்கை புனரமைப்பு (பகுதி) - சண்டிலிப்பாய் | 6000.00 | 500.00 | 75.00 |
| 4 | அதிகார் செல்லமுத்து வீதி புனரமைப்பு (மிகுதி வேலை) - மானிப்பாய் | 3000.00 | 500.00 | 75.00 |
| 5 | பொந்து வீதி புனரமைப்பு - பண்டத்தரிப்பு | 5000.00 | 500.00 | 75.00 |
| 6 | முருகமூர்த்தி கோயில் ஒழுங்கை புனரமைப்பு (பகுதி) - நவாலி | 5500.00 | 500.00 | 75.00 |
| 7 | G.T.M பாடசாலை இணைப்பு ஒழுங்கை புனரமைப்பு - சுதுமலை | 1000.00 | 300.00 | 45.00 |

**திருமதி பு.சிவலிங்கம்,**
*செயலாளர்,*
*வலி.தென்மேற்குப் பிரதேச சபை,*
*மானிப்பாய்.*

*(சி/554055)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கற்றல் உபகரணங்கள், நிரந்தர மைதானம் என்பவற்றுக்கு ஏங்குகின்ற மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை மாணவர்கள்

## பின்தங்கிய பாடசாலைகள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படும்நிலை மாற்றம் பெறவேண்டும்

பவித்திரன்

இளவாலை மாரீசன்கூடல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை கல்வித் துறையில் பலருக்கு அத்திவாரம் இட்டு அவர்களைச் சிறந்த சமூக பிரஜைகளாக உருவாக்கிய ஒரு பாடசாலை. இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றவர்கள் இன்று பல்வேறு அரச பதவிகளிலும் உயர்நிலைகளில் கடமையாற்றுகின்றார்கள்.




பாடசாலையின் தோற்றம், செயற்பாடுகள் பற்றி பாடசாலையின் அதிபர் எஸ்.நோபேட் உதயகுமார் விரிவாகக் கூறினார்.

1880 ஆம் ஆண்டு இப்பாடசாலை கிறிஸ்தவ மிசனறியினரால் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இன்று இப்பாடசாலை 128 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. இதன் வளர்ச்சிக்கு பலருடைய ஒத்துழைப்பும் ஆதரவும் மூல காரணங்களாக விளங்குகின்றன.

1961ஆம் ஆண்டு அரச பாடசாலையாகப் பொறுப்பேற்கப்பட்டு இயங்கிக் கொண்டு இருக்கும் இப்பாடசாலையில் இன்றும் ஒரு சில வகுப்புகள் பழைய கட்டடத் தொகுதியிலேயே இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

தரம் ஒன்று முதல் ஐந்து வரை வகுப்புகளைக் கொண்டுள்ள இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலையில் 136 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 5 ஆசிரியர்களும், தற்காலிக இணைப்புப் பெற்ற ஓர் ஆசிரியரும், தொண்டர் ஆசிரியர் ஒருவருமாக மொத்தம் ஏழுபேர், மாணவர்களின் கல்விப் போதனைச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

1992 ஆம் ஆண்டு நிகழ்ந்த இடம்பெயர்வுக்கு முன்னர் 350 இற்கும் மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்டதாக இப்பாடசாலை செயற்பட்டு வந்தது. தற்போது பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படக் காரணம் இடம்பெயர்ந்த மக்களிற் பலர் இன்னும் மீளக்குடியேறாமையேயாகும்.

1999 ஆம் ஆண்டு மீண்டும் இப்பாடசாலை தனது சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது. அப்போது யூ.என்.ஏச்.சி.ஆர் (UNHCR) அமைப்பினால் இப்பாடசாலையின் சேதமடைந்த கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு, வகுப்புக்களை நடத்தக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டது.

தமிழ்த்தினப் போட்டிகளில் ஆங்கிலதினப் போட்டிகளில் மாணவர்கள் கோட்டம், வலயம் வரை சென்று தமது ஆற்றலை வெளிப்படுத்தி வருவதுடன் பரிசில்களையும் பெற்று வருகின்றார்கள்.

ஆங்கில ஆசிரியர் ஒருவர் இப்பாடசாலையில் பகுதிநேர ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். அத்தோடு தொண்டர் ஆசிரியர் ஒருவரும் கடமையாற்றுகின்றார்.

விளையாட்டுத் துறையிலும் மாணவர்கள் ஆர்வம் காட்டுகின்ற போதிலும் விளையாட்டு மைதானம் இல்லாததால் மாணவர்களின் விளையாட்டுத் திறன்கள் வெளிக்கொணர முடியாத சூழலே நிலவுகின்றது.

சுற்றாடல் பகுதியில் பற்றைகள் படர்ந்து பல காணிகள் காணப்படுகின்றன. அவற்றின் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் வசித்து வருகின்றபோதிலும் பாடசாலை மைதானத்துக்கென காணிகளை வழங்கும் விடயத்தில் பின்னடித்துவரும் நிலைமையே காணப்படுகின்றது.

பாடசாலையில் கட்டடப் பற்றாக்குறை காணப்படுகின்றது. இது நவீன கற்பித்தல் முறைக்கு பெரும் இடையூறாக காணப்படுகின்றது. தற்போது இப்பாடசாலைக்கு ஆகக் குறைந்தது 110 × 25 அடி கொண்ட கட்டடம் ஒன்று உடனடியாகத் தேவைப்படுகின்றது.

தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் பெற்றோர்கள் கூடிய அக்கறை காட்டி வருகின்றார்கள். மாதாந்தம் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இடையே சந்திப்புகள் இடம்பெற்று மாணவர்களின் கல்வியில் பெற்றோர்களின் பங்களிப்பும் பெறப்படுகின்றது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் இப்பாடசாலை மாணவர்கள் உயர் பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். இப்பாடசாலையின் ஊடாக சூழலில் வசிக்கும் மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வி உரிய முறையில் ஊட்டப்பட்டாலும் இடைநிலைக்கல்வி இப்பகுதி மாணவர்களுக்கு பெரும் இடையூறாக இருக்கின்றது.

குறிப்பாக மிகவும் பின்தங்கிய கஷ்டமான பகுதியில் இப்பாடசாலை இயங்குகின்றது. இப்பகுதியில் இருந்து ஏனைய இடைநிலை வகுப்புகளைக் கொண்ட இப்பாடசாலைகள் ஆகக்குறைந்தது 3½ கிலே மீற்றர் முதல் நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் காணப்படுகின்றன.

போக்குவரத்து வசதிகள் அற்ற நிலைமையில் ஏனைய பாடசாலைகளுக்குச் சென்று இடைநிலைக் கல்வியைக் கற்பதென்பது பாரிய பிரச்சினையாகும். பெற்றோர்களும் மிகவும் வசதி குறைந்தவர்களாகக் காணப்படுவதினால் தனியார் பஸ் சேவைக்கு நாளாந்தம் பணம் கொடுத்துச் செல்லக் கூடிய நிலைமையும் மாணவர்களிடத்தே இருப்பதில்லை. இதனால் அவர்களின் தொடர்ச்சியான கற்றல் செயற்பாடுகள் பெருமளவில் பாதிப்புறுகின்றன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பன சிறந்த முறையில் இயங்குகின்றன. பழைய மாணவர் சங்கம் இன்றும் ஆசிரியர் தினக் கொண்டாட்டங்களை முன்னெடுப்பதுடன் விளையாட்டுப் போட்டிகள் உட்பட பாடசாலைகளில் இடம்பெறும் ஏனைய நிகழ்வுகளுக்கும் பல்வேறு வழிகளிலும் உதவிகளைச் செய்து வருகின்றார்கள்.

வாசலில் உள்ள பாடசாலையின் பெயர் தாங்கிய வளைவு கூட பழைய மாணவன் ஒருவர் செய்து வழங்கியதாகும்.

உலக உணவுத் திட்டம் நல்ல முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. பெற்றோர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதால், மாணவர்களின் விருப்புக்கு ஏற்ப



அதிபர்
எஸ்.நோபேட் உதயகுமார்

உணவினை வழங்க முடிகின்றது.


மாரீசன் கூடல் றோ.க.த.க.பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஏனைய பாடசாலைகளில் உள்ள வசதி வாய்ப்புகள் நவீன கற்றல் உபகரணங்கள் என்பனவெல்லாம் எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றன.

பாடசாலைக்கு கணனி வசதிகள், தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி எனச் சில கற்றல் சாதனங்கள் மாணவர் களின் கல்வி விருத்திக்காக உடனடியாகத் தேவைப்படுகின்றன. இன்றைய நவீன கற்றல் கற்பித்தல் முறையில் இச்சாதனங்கள் பரவலான பயன்பாட்டில் ஏனைய பாடசாலைகளில் இருக்க, இத்தகைய பின்தங்கிய பாடசா லைகள் இவற்றின் உபயோகம் பற்றி அறியாமலிருக்கும் நிலைமையில் மாற்றம் செய்ய வேண்டும்.

கல்வித் திணைக்களம் நிதி ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில், அரச சார்பற்ற நிறுவனங்கள் இத்தகைய பாடசாலைகளின் மீது தமது கவனத்தைத் திருப்ப வேண்டும். பாடசாலைகளின் தேவையின் முக்கியத்துவத்தினை உணர்ந்து தமது உதவியின் ஒரு பகுதியை இத்தகைய பாடசாலைகளின் வளர்ச்சிக்காக நகர்த்த வேண்டும்.

பின்தங்கிய பாடசாலை தொடர்ந்தும் பின்தங்கியதாகவே இருக்க, வளர்ச்சியடைந்த பாடசாலைகளையே தொடர்ந்தும் வளப்படுத்தும் நிலமையில் இருந்து விடுபட்டு வளங்குன்றிய பாடசாலைகளுக்கும் வளங்களைக் கொடுத்து வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பும் தார்மீகக் கடமையும் அனைவருக்கும் உண்டு. ******

---




# செவிப்புலத்துக்குரிய விடயங்களைக் கட்புலன் ரீதியாக துல்லியமாக வெளிப்படுத்திய அழகியற் கண்காட்சி

து.துசியந்தன்
ஆசிரிய ஆலோசகர், யாழ்.கல்விவலயம்

மனிதன் நாகரிகம் அடையத் தொடங்கியவுடன் அழகு என்பது முதன்மையான இடத்தைப் பெற்றுவிட்டது. உடுக்கும் ஆடை தொடக்கம் வசிக்கும் வீடுவரை அழகுபடுத்த முற்பட்டான். அன்றிலிருந்து சித்திரக்கலை உருப்பெறத் தொடங்கியது. தனது பொழுது போக்கிற்கும், தனது அழகுணர்ச்சியை வெளிப்படுத்தவும் பாடவும், ஆடவும் செய்தபோது இசை, நடனம், நாடகம் போன்ற அழகியற் கலைகள் உதயமாகின.

மாணவர் மத்தியில் இரசனை விருத்தியை ஏற்படுத்தவும், மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்தவும் அழகியற் கலைகள் பாடசாலைப் பாடவிதானத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இந்த நோக்கத்தை சிறந்த முறையில் முன்னெடுக்கும் முகமாக யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினால் அண்மையில் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தின் சித்திரக் காட்சியறை (Art Galary) நடத்தப்பட்டது. இக்கண்காட்சியினை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆரம்பித்து வைத்தார்.

இலங்கையில் இளம் ஓவியர் கலைஞர்களை வளர்த்தெடுக்கும் முகமாக 1970 களின் பின்பு நிறுவப்பட்ட மூன்று சித்திரக் காட்சியறைகளில் (Art Galary) கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நிறுவப்பட்டுள்ள சித்திரக் காட்சியறையும் ஒன்றாகும். இருப்பினும் பல காலமாக அமைக்கப்பட்டதற்கான முதன்மையான தோற்றத்தை இழந்த நிலையிலேயே காணப்படுகிறது. அதனை மீண்டும் ஒரு புதுப் பொலிவு ஏற்படுத்துவதற்கான முன் முயற்சியாக இந்த அழகியற் கண்காட்சியமைந்தது.



யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர்
திருமதி அ.வேதநாயகம்
கண்காட்சியைப் பார்வையிடுகின்றார்

இந்த அழகியற் கண்காட்சியில் சித்திரம், கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், நாடகமும் அ[illegible] பாடத்திற்கு[illegible] வலய ரீதியிலான சிறந்த ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டது. இந்தக் கண்காட்சி யூலை 16, 17, 18 ஆகிய மூன்று தினங்கள் நடைபெற்றது. இக்கண்காட்சியை ஆயிரக் கணக்கான மாணவர்கள் பார்வையிட்டுப் பயனடைந்தனர்.

சித்திரத் துறையைப் பொறுத்த வரையில் நீர்வர்ணம் (Water colour) தைலவர்ணம் (Oil colour) ஆகிய ஊடகங்க[illegible]படுத்தி வரையப்பட்ட ஓவியங்கள் மனதைக் கவரும் விதத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதனை விடப் பல்வகை ஊடகங்களைப் பயன்படுத்திச்செய்யப்பட்ட சிற்பங்கள், 'றெஜி போம்' ஓவியங்கள், மண்பானைகளிலும், துணிகளிலும் செய்யப்பட்ட ஆக்கங்கள், கழிவுப்பொருள்கள், உடைந்த கண்ணாடித் துண்டுகள் போன்றவற்றால் ஆக்கப்பட்ட ஆக்கங்களும் காண்போரை வியக்கும் வண்ணமாகக் காணப்பட்டன.

தனது இரண்டு கண்களையும் அசைத்து வரவேற்கும் முகமாகக் காணப்பட்ட 'றெஜி போம்' மனிதன் தொடக்கம் நடன அரங்கு, நடன ஒப்பனை, நடனத்திற்குரிய அசைவுகள்வரை பல்வேறுபட்ட நடனத்திற்குரிய ஆக்கங்கள் செய்முறை விளக்கத்துடன் காணப்பட்டன.

சங்கீதத் துறையைப் பொறுத்தவரையில் செவிப்புலத்திற்குரிய பல விடயங்களைக் கட்புல ரீதியில் வெளிப்படுத்திய ஆக்கங்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுக் கொண்டன. இதனைவிட இன்று சாதாரணமாக காணமுடியாத அரிய வாத்தியக் கருவிகளையும் இக்கண்காட்சியில் காணக்கூடியதாக இருந்தது.

கி.மு. 5 ஆம் நூற்றாண்டுகள் தொடக்கம் இன்றுவரை உலகின் பல்வேறு பாகங்களில் காணப்பட்ட, காணப்படும் நாடக அரங்குகளின் அமைப்பினை வடிவமைத்து காட்சிப்படுத்தியிருந்தார்கள் நாடகமும் அரங்கியலும் சார்ந்த மாணவர்கள்.

மனித திறனில் இருந்து வெளிவந்தவைகள் கலை என்பார்கள். அதே போல மனிதனிடம் மறைந்திருக்கும் திறன்களை வெளிக்கொணர்தல் (வெளிக் கொண்டு வருதல்) கல்வி என்பார்கள். இவ்விரண்டையும் வெளிக் கொண்டு வந்ததாக இவ் அழகியற் கண்காட்சி அமைந்தது. ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் நினைவுகள் -8

## 14ஆவது ஒலிம்பிக் (1948)

2 ஆவது உலகப் போர் காரணமாக 1940 இல் 12ஆவது ஒலிம்பிக் போட்டியும், 1944 இல் 13ஆவது ஒலிம்பிக் போட்டியும் நடைபெறவில்லை.

14 ஆவது ஒலிம்பிக் போட்டி 1948ஆம் ஆண்டு இங்கிலாந்தின் லண்டனில் ஜூலை 29 முதல் ஒகஸ்ட் 14 வரை நடைபெற்றது. இதில் 59 நாடுகளிலிருந்து 3, 714 ஆடவரும்,390 மகளிரும் (மொத்தம் 4,104 பேர்) பங்கேற்றனர். 17 விளையாட்டுகளில் 136 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன

13ஆவது ஒலிம்பிக் போட்டி 1944இல் ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடப்பதாக இருந்தது. உலகப் போர் காரணமாக அது நடக்காமல் போக, தபால் வாக்கு மூலம் 14ஆவது ஒலிம்பிக் போட்டியை நடத்தும் வாய்ப்பு லண்டனுக்கு அளிக்கப்பட்டது.

12 ஆண்டுகளுக்குப் பின் போட்டி நடைபெற்றதால் மிகுந்த எதிர்பார்ப்பு நிலவியது. நிகழ்ச்சியில் 85 ஆயிரம் பேர் பங்கேற்றனர். போட்டிகளை அரசர் ஐந்தாம் ஜோர்ஜ் தொடங்கி வைத்தார்.

கிஷன் லால் தலைமையில் பங்கேற்ற இந்திய ஆடவர் ஹாக்கி அணி தங்கப் பதக்கம் வென்றது. அமெரிக்கா 38 தங்கம், 27 வெள்ளிகள் உட்பட 84 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது. சுவீடன் 16 தங்கம் உட்பட 44 பதக்கங்களுடன் இரண்டாம் இடத்தையும், பிரான்ஸ் 10 தங்கம் உட்பட 29 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்தையும் பிடித்தன.

## 15 ஆவது ஒலிம்பிக் (1952)

15ஆவது ஒலிம்பிக் போட்டி பின்லாந்தின் ஹெல்சிங்கியில் ஜூலை 19 முதல் ஒகஸ்ட் 3 வரை நடைபெற்றது. 69 நாடுகளிலிருந்து 4,436 ஆடவரும், 519 மகளிரும் (மொத்தம் 4,955 பேர்) பங்கேற்றனர்.

சோவியத் ரஷ்யாவில் இருந்தும், இஸ்ரேலில் இருந்தும் முதல்முறையாக வீரர், வீராங்கனைகள் ஒலிம்பிக்கில் பங்கேற்றனர். சோவியத் மகளிர் ஜிம்னாஸ்டிக் குழு தங்கம் வென்றது.

வெறும் ஒரு கோடி மக்கள் தொகையைக் கொண்ட ஹங்கேரி 42 பதக்கங்களை வென்று விளையாட்டு உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பதக்கப்பட்டியலில் அமெரிக்கா, ரஷ்யாவுக்கு அடுத்து ஹங்கேரி 3ஆம் இடத்தைப் பிடித்தது.

தடை விதிக்கப்பட்டிருந்த ஜேர்மனி, ஜப்பான் ஆகிய இருநாடுகளும் இப் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டன. அப்போது ஜேர்மனி மூன்று பிரிவுகளாக இருந்தது. மேற்கு ஜேர்மனியில் இருந்து மட்டுமே வீரர்கள் பங்கேற்றனர். 24 பதக்கங்கள் வென்று பட்டியலில் 5 ஆம் இடத்தைப் பிடித்தாலும், ஒரு தங்கம் கூட ஜேர்மனி வெல்லவில்லை. ஒலிம்பிக்கில் ஜேர்மனி ஒரு தங்கமும் வெல்லாதது இதுவே முதல் மற்றும் கடைசி முறை. லக்ஸம்பேர்க் என்ற சிறிய நாட்டின் வீரர் ஜோசி பார்தெல் 1500 மீற்றர் ஓட்டத்தில் வென்று வியப்பில் ஆழ்த்தினா[illegible]

செக்கோஸ்லோவாக்[illegible]வின் எமில் ஐடோபென் 5,000 மீற்ற[illegible] [illegible],000 மரதன் ஓட்டப் போட்டிகளில் தங்கம் வென்றார். அதற்கு முன்னர் அவர் மரதன் ஓட்டத்தில் பயிற்சிகூட மேற்கொண்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 16ஆவது ஒலிம்பிக் (1956)

16ஆவது ஒலிம்பிக் போட்டி, 1956ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகரில் நடைபெற்றது. இப்போட்டியில் 72 நாடுகள் பங்கேற்றன. 17 விளையாட்டுகளில் 145 பிரிவுகளில் 3314 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

சுயஸ் கால்வாய் பிரச்சினையில் தொடர்புடைய பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் இப் போட்டியில் பங்கேற்றதால், எகிப்து, லெபனான், ஈராக் ஆகிய நாடுகள் பங்கேற்கவில்லை. அதேபோல ஹங்கேரி புரட்சியை சோவியத் யூனியன் கையாண்டவிதத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்பெயின், நெதர்லாந்து, சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகள் பங்கேற்கவில்லை.

ஆனால், சம்பவத்துக்குக் காரணமான சோவியத் யூனியனுடன் ஹங்கேரி பங்கேற்றமை மற்றைய நாடுகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனி வீரர்கள் ஒருங்கே இப்போட்டியில் பங்கேற்றனர். தவிர்க்க முடியாத காரணங்களால் குதிரைப் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெறவில்லை. போட்டி தொடங்குவதற்கு 5 மாதங்களுக்கு முன்பே சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் அப்போட்டி நடத்தப்பட்டுவிட்டது.

ஒரே போட்டியில் 3 தங்கம் வென்ற பாபிஜோ மாரோவின் சாதனையைச் சமன் செய்தார் ஆஸ்திரேலிய தட கள வீராங்கனை பெட்டி க்யூத்பெர்ட். இதனால் அவர் தங்க மங்கையாக அறிவிக்கப்பட்டார்.

மற்றொரு ஆஸ்திரேலிய வீராங்கனை முர்ரே ரோஸ், நீச்சல் போட்டியில் 3 தங்கங்கள் வென்றார். சோவியத் வீரர் விளாடிமிர் குட்ஸ், 5 ஆயிரம் மற்றும் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் பந்தயங்களில் தங்கம் வென்றார்.

## 17 ஆவது ஒலிம்பிக் (1960)

17ஆவது ஒலிம்பிக் போட்டி 1960 ஆண்டு இத்தாலி தலைநகர் ரோமில் நடைபெற்றது. 83 நாடுகள் பங்கேற்றன. முன்னெப்போதும் இல்லாத அளவாக 5,338 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். 17 விளையாட்டுகளில் 150 நாடுகள் பங்கேற்றன.

மகளிர் ஜிம்னாஸ்டிக்ஸில் 16இல் 15 பதக்கங்களை சோவியத் யூனியன் வென்றது. டென்மார்க் வீரர் பால் எல்வ்ஸ்ட் ரோம், தனிநபர் போட்டியில் 4 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்தார்.

கிரீஸ் மன்னர் இரண்டாவது கான்ஸ் டன்டைன், படகுப் போட்டியில் தங்கம் வென்றார்.

போலியோ நோயால் தாக்கப்பட்ட வில்மா ருடால்ப், தடகளப் போட்டிகளில் 3 தங்கப் பதக்கங்களை வென்று அசத்தினார். மரதன் போட்டியில் ஷூ அணியாமல் ஓடி தங்கம் வென்றார் அபேபே பிகிலா. இதன் மூலம் தங்கம் வென்ற முதல் தென்னாபிரிக்க் கறுப்பர் என்ற பெருமையைப் பெற்றார்.

முகமது அலி(காசியஸ் கிளே என்பது தான் அவரது உண்மையான பெயர்) லைட் - ஹெவிவெயிட் குத்துச்சண்டையில் தங்கம் வென்றார்.

டென்மார்க் சைக்கிள் பந்தய வீரர் நாட் என்மார்க், போட்டியின் போது கீழே விழுந்து நிலை குலைந்தார். பின்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இறந்தார்.

ஒலிம்பிக் போட்டியின் போது இறந்த இ[illegible]ண்டாவது நபர் இவர். 2004 ஆம் ஆண்டு அ[illegible]மரிக்க துணை அதிபர் தேர்தலில் போட்டியிட்ட பீட்டல் கேமிஜோ, பாய்மர படகுப் போட்டியில் வெனிசுலா நாட்டுக்காக பங்கேற்றார்.

இந்த ஒலிம்பிக் போட்டியில் இந்திய அணியைத் தோற்கடித்து, முதல்முறையாக ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்றது பாகிஸ்தான் ஆடவர் ஹொக்கி குழு என்பது குறிப்பிடத்தக்கது. படகுப் போட்டியில் கிரேக்கத்தின் சார்பின் அந்நாட்டு ராணி சோபியா பங்குபற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.




## டெனுசியா

கைதடி வடக்கைச் சேர்ந்தவர்களும் தற்போது டென்மார்க் நாட்டில் கேணிங் நகரில் வசிப்பவர்களுமான **கிருபதாஸ் தயாநிதி** தம்பதிகளின் ஏக புதல்வி செல்வி **டெனுசியா** தனது மூன்றாவது பிறந்தநாளை இன்று (07.08.2008) வியாழக்கிழமை டென்மார்க்கிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அம்மா, ஆசை அப்பா, அருமைத் தம்பி நிக்ஸன், பாசமுள்ள அத்தை டலஸ்னி மற்றும் அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மம்மா, சித்தப்பாமார், சித்தி, பெரியப்பா, பெரியம்மாமார், அத்தைமார், மாமன்மார் மற்றும் உற்றார், உறவினர் யாவரும் கைதடி வடக்கு கயிற்ற சிட்டி கந்தன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ உளமார வாழ்த்துகின்றனர்.

*தகவல்: வ.கந்தையா (அப்பப்பா), கைதடி வடக்கு.*

## அந்த நாள் ஞாபகம்...



சகோதரத்துவத்தை வெளிப்படுத்துவதற்காகத் தான் ஒலிம்பிக் போட்டி நடத்தப்படு கிறது. ஆனால், அதற்கு நேர்மாறாக 1956 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் அரசியல் பகை மையைத் தீர்த்துக்கொள்வது போல் இரு நாட்டு வீரர்களும் மோதிக் கொண்டமை வரலாற்றில் அழியாது இடம் பெற்றுள்ளது.

சோவியத் யூனியனின் கம்யூனிஸ ஆதிக்கத்தை எதிர்த்து ஹங் கேரியில் புரட்சி வெடித்தது. கம்யூனிஸ வெறியாளர்கள் அகற்றப்பட்டு, இம்ரி நாகி தலைமையிலான கம்யூனிஸ எதிர்ப்பாளர்கள் ஹங்கேரியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆனால், இதை விரும்பாத சோவியத் யூனியன், புதாபெஸ்ட் நகரில் நுழைந்து நாகி உள்பட நூற்றுக்கணக்கானோரை கொன்று குவித்தது. அப்போது சோவியத் யூனியன் அட்டூழியத்தை ஐக்கிய நாடுகள் சபையால் வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தது.

இதற்கிடையே அந்த சமயத்தில் மெல்போர்னில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வோட்டர் போலோ விளையாட்டுப் போட்டியின் அரையிறுதியில் ஹங்கேரியும், சோவியத் யூனியனும் மோதின. தங்களது எதிரியைப் பழிவாங்க ஹங்கேரி வீரர்கள் துடித்துக் கொண்டிருந்தனர்.

போட்டி ஆரம்பத்திலிருந்தே பரபரப்பாக இருந்தது. ஹங்கேரி வீரர்கள் தொடக்கத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்தினர். அவ்வப்போது இரண்டு அணி வீரர்களும் தண்ணீருக்குள்ளேயே மோதிக்கொ[illegible] எர்வின் ஜடோர் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு சோவியத் யூனியனை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். இதனால் ஆத்திரமுற்ற சோவியத் வீரர்கள் வீண் தகராறில் ஈடுபட்டதுடன், அத்துமீறியும் நடந்துகொண்டனர். அப்போது ஏற்பட்ட சண்டையில் ஜடோருக்கு முகத்தில் அடி விழுந்து ரத்தம் பீறிட்டது.

இதனால் போட்டி நடந்த குளத்தின் நீர் சிவப்பு நிறமாக மாறியது. உடனே களத்திலிருந்த ஜடோர் வெளியேற்றப்பட்டார்.

இதையடுத்து இரண்டு அணி வீரர்களும் மோதிக் கொண்டனர். ரசிகர்களும் அரங்கில் நுழைந்து ரகளையில் ஈடுபட்டதால், போட்டி நிறுத்தபட்டது. 4-0 என்று முன்னிலை பெற்றிருந்த ஹங்கேரி, வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. பொலிஸ் பாதுகாப்புடன் சோவியத் வீரர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இறுதிப் போட்டியில் ஹங்கேரிக்கு தங்கம் கிடைத்தது.

## பிறந்ததின வாழ்த்து




### K.செல்வரட்ணம்

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவின் முன்னாள் நிர்வாகசபை உறுப்பினரும் பிரபல சமூக சேவையாளருமான லயன் K.செல்வரட்ணம் J.P அவர்கள் இன்று (07.08.2008) வியாழக்கிழமை 70 ஆவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக லண்டனில் தனது குடும்பத்தினருடன் கொண்டாடுகின்றார். பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கும் அவரை நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

கோப்பாய் லயன்ஸ் [illegible]
இலங்கை செஞ்சிலுவைச் சங்க[illegible]

## வீதிதிருத்த நடவடிக்கை

வடமராட்சி, ஒக.6

பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள மருதடி தொடக்கம் பஸ் நிலையம் வரையிலான வீதியைத் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பருத்தித்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

சபைக்குத் தேவையான தார் கிடைக்கப்பெற்றதும் இந்தப் பிரதான வீதி திருத்தி[illegible] [illegible] என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(203–236)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### தெய்வேந்திரன் சதீஸ்

(யாழ்.பரியோவான் கல்லூரி பழைய மாணவன்)

தாயின் மடியில்
17.06.1976

இறைவன் மடியில்
03.08.2003

திதி: சஷ்டி

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறவில்லை உன் பிரிவின் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அவை அனைத்திற்கும் ஈடாகுமா உன் அன்பு.

தகவல்: தந்தை—தாய்.

லண்டன்.

ஜெயா வைண்டிங் வேக்ஸ், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடியாரைக் காத்தருள வந்துதித்த ஆறுமுகப் பெருமான்

முருகப்பெருமானின் அருட் பிரவாகம் வேத காலத்திற்கு முந்தியது. முருகன் என்றால் அழகு, இளமை என்றும் பொருள்படும். இதனால் இளமையும் அழகும் எங்குண்டோ அங்கு முருகப் பெருமானின் பிரதி விம்பத்தைக் காணமுடிகின்றது.

சிவபெருமானிடம் தனது தவத்தின் வலிமையால் 108 யுகவாழ்வுபெற்ற சூரபன்மன் அவ்வாறு தனக்கு வலிமையான வரங்கள் முதலாகப் பல ஆயுதங்களை அளித்த சிவபெருமானையே மறந்து முருகனுடன் சமர்புரிந்தான்.

ஒருமுறை தேவர்கள் சிவத் துரோகம் செய்த தக்கனின் யாகத்தில் கலந்து கொண்டார்கள். இதனாலேதான் நந்தியந்தேவரின் சாபத்தால் சூரபன்மனால் தேவர்கள் 108 யுகங்களாக வருந்தினார்கள். தாங்கள் செய்த சிவத்துரோ கத்தை மறந்து தங்களின் தீராத, மிகவும் நீண்ட நாளாக நிகழ்ந்துவரும் துயரத்தை நீக்கும் படி தேவர்கள் சிவபெருமானை நோக்கித் தவம் இருந்த பயனால் முருகப் பெருமான் சிவபெருமானின் நெற்றிக் கண்களில் இருந்து ஆறு அக்கினிப் பிழப்பாக உதித்தார். சரவணப்பொய்கையில் ஆறு குழந்தைகளாய் தவழ்ந்து கார்த்திகைப் பெண்களால் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கப் பட்டார். உமாதேவியால் ஆறு குழந்தைகளும் ஒன்றாக அணைக்கப் பட்டு, கந்தப்பெருமான் என்னும் திருநாமம் சூட்டப்பட்டார்.

முழுமுதற் பொருளாகிய சிவ பெருமானை அவமானப்படுத்திய தக்கன் செய்த யாகத்தில் கலந்து கொண்ட மாபெரும் பாதகச் செயலால் 108 யுகம் சூரனால் வருத்தப் பட்டார்கள். சூரனின் கொடிய துன்பத்தை ஒழிக்கும் பொருட்டு சிவ பெருமான் முருகப்பெருமானிடம் ஞானவேல் கொடுத்து ஆசீர்வதித்துப் போருக்கு முருகப் பெருமானை அனுப்பினார்.

முருகப் பெருமானின் ஞாவேற் படையால் அசுரர் குலம் வேருடன் அழிந்தது. அதாவது கொடிய நீதியுடைய சூரனின் உறவினர் முதலாக யாவரும் அழிந்தாலும், கடுந்தவம் செய்த காரணத்தால் சூரபன்மன் சேவற்கொடியும் மயில் வாகனுமாக முருகனுக்குப் பணிசெய்து வருவதைக் கந்தபுராண வரலாறு எடுத்துரைக்கின்றது.

கந்தபுராணத்தை வட மொழியில் வியாசமுனிவர் எழுதினார். கந்தபுராண கலாசாரம் தமிழர்களிடையே பரவ வேண்டும். நீதி, அறங்கள் வழிநின்று தமிழர் நன்கு வாழவேண்டுமென்ற கருணை உள்ளம் கொண்ட கந்தப் பெருமான், கச்சியப்ப சிவாச் சாரியார் கனவில் தோன்றி தேனா மிர்தம் போன்ற செந்தமிழில் எழுத அருளினார்.

உற்ற இடத்தில் உதவுகின்ற முருகப் பெருமானைப் போற்றிப் புகழ்ந்து உள்ளம் உருகிப்பாடி வழிபடுவோம். இன்றைய துயரைத் துடைப்போம். அமைதியும் சமாதானமும் பெறுவோம்.

- மாதாஜி.

### முருகப் பெருமானின் அருள்

அஞ்சமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்- நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்.

★ ★ ★

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில்வாழ் வே. - [நக்கீரர்]

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஒக.7

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சைவப் புலவர் பால சண் முகன் ''சுந்தரர் காட்டிய பக்திநெறி'' என்னும் தலைப்பில் சொற்பொழி வாற்றவுள்ளார்.

ஏழாலை ஆத்மஜோதி அறநெறிப் பாடசாலை, ஓட்டுமடம் ஸ்ரீஞான வைரவர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (203)

* * *

கரவெட்டி, ஒக.7

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

உற்சவம் 14 நாள்கள் நடைபெறும். விசேட உற்சவங்களான தேர்த்திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும், தீர்த்தத் திருவிழா 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறும். (202-70)

* * *

கரவெட்டி, ஒக.7

செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகின்றது.

திருவிழாக்கள் 16 நாள்கள் நடைபெறும்.

இத்திருவிழாக்களின் சிறப்பு உற்சவங்களான பூங்காவனம் அடுத்த மாதம் 8 ஆம் திகதி காலை 9 மணிக்கும் சப்பறத் திருவிழா 13 ஆம் திகதி சனிக் கிழமை மாலை 4 மணிக்கும் தேர்த்திருவிழா 14 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கும் தீர்த்தத்திருவிழா 15 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளன. (202-70)

## அன்புப் பார்வை வெறுப்பை அழித்திடும்

அன்பே கடவுள், அன்பில் வாழுங்கள். அதற்குத் தொடக்கமும் இல்லை. முடிவும் இல்லை. அது அளவற்றது. அதைக் கூறுபோட இயலாது. அனைத்து ஆன்மீக வழிகளும், அன்பின் வழிகளேயாகும். இலட்சியமும், அன்பே. அது ஒன்றுதான் உலகத்தில் எப்போதும் இருந்து வருகிறது. எந்த நேரத்திலும், அன்பை நீங்கள் விட்டுக் கொடுத்தலாகாது.



உலகியல் நோக்கில், பொறாமை, கர்வம் போன்றவை கெட்ட குணங்கள். ஆனால் அனைவரையும் அன்புடன் பார்த்தால், வெறுப்பு என்பது உம்மிடம் இராது. இருவர் இல்லாது, ஒருவர் மட்டுமே இருக்கும்போது, வெறுப்பு என்பதற்கு இடமே இல்லை. எல்லா ஜீவர்களிடமும் ஆத்மா என்ற பிரவாகம் அன்பாக ஓடிக்கொண்டிருக்கிறது. நீங்கள் பிரேம தத்துவத்தை வளர்த்து, விரிவடையச் செய்ய வேண்டும். பெயர்கள், உருவங்கள், இவற்றை நீங்கள் இலட்சியம் செய்யக் கூடாது. பல்வேறு உருவங்கள், பெயர்கள் இவற்றிலுள்ள ஒருமையினை மட்டுமே காணுங்கள். அப்போது நீங்கள் தெய்வத்துவத்தை அறிந்துணர்வீர்கள். எவ்வாறு பிரமரம் (ரீங்காரம் செய்யும் வண்டு) உள்ளிருக்கும் புழுவுக்கு தனது ரீங்கார ஒலியைப் பதியும்படி செய்து, அதைத்தன்னுடைய உருவம் கொள்ளும்படி மாற்றுகிறதோ, நீயும் அதுபோல தெய்வீக நாமத்தில் முழுக் கவனமும் செலுத்தி, தெய்வீகமாக மாற வேண்டும்.

### சாயி சிந்தனை





இன்று இரண்டாம் திருவிழா

வேல் - வள்ளி - தெய்வானை மாலை வீதி வலம்

நல்லைக் குமரனே! நல்லூர்க் கந்தனே!

உன்னைச் சரணடைந்தோம் காத்தருள்வாய்....

விழாச்சிறப்புற வாழ்த்துவோர்:

UNIT மனோகரா தியேட்டர் சந்தி 347, K.K.S Road, Jaffna. Ph:021-4590720,077[illegible]


## வல்லிபுர வெளிப்பகுதியில் குடியிருப்புக் காணிகள்

வடமராட்சி,ஒக7

வடமராட்சி வடக்கு (பருத்தித் துறை) பிரதேச செயலர் பிரிவில் உள்ள வல்லிபுர மணல் வெளியில் 50 குடும்பங்களுக்கு குடியிருப்புக்கென காணி வழங் கப்பட்டுள்ளது.

வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்து நண்பர்கள், உறவினர்களுடன் தங்கிவரும் காணியற்றோருக்கும், வறிய நிலையில் உள்ள காணியற்ற குடும்பங்களுக்கும் காணிக் கச்சேரிமூலம் இப் பகுதியில் குடியிருப்புக் காணிகள் வழங்கப்படவுள்ளன.

வல்லிபுரம் கிராம அலுவலர் பிரிவில் வல்லிபாம் மணல் வெளி என அழைக்கபபடும் ஆனை விழுந்தான் பகுதியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணிக்குப் [illegible] குடியிருப்புக் காணிகள் வழங்கப்பட வுள்ளன. (203-236)

# நல்லூர் பெருந்திருவிழா பக்திப் பாக்கள்

(வியாழக்கிழமை)

ஆன்மா ஒருபோதும் - கிளியே
அழியாதது நாங்கள்
வீண்பாவம் விட்டிட்டடி - கிளியே
விளங்குநல்லூர் தெரியுதடி.
- யோகர் சுவாமிகள்.

### ஆயிரம் வரம் தருவானே

திங்களும் கொன்றையும் அரவும்
திகழ்முடி சூடிய சிவனின்
பொங்கிடு சோதியில் தோன்று
புகழுடன் வாழ்வடி வேலன்
எங்களின் இருவினை நீத்த
எழில் நல்லைக் கோயிலி லமர்ந்தான்
அங்கவன் தாளினை பணிந்தால்
ஆயிரம் வரம் தருவானே
- முதுபெரும் புலவர் கலாபூஷணம், வை.க.சிற்றம்பலவனார்.

### காத்தருள்வாய்

நல்லைநகர் நாயகனே நாம்வணங்கும் செவ்வேளே
நாடி உன்னை
சொல்லுகிறோம் பல்காலும் சோர்ந்தவராய் எம்குறையை
துணைநீ யென்று
வல்லபங்கள் பேசிடுவோர் வாட்டுகிறார் எம்மவரை
வஞ்சங் கொண்டு
நல்லறிவு தந்தவர்க்கு நம்மையெல்லாம் காத்தருள்வாய்
நல்லைக் கந்தா
- சி. வெற்றிவேலு, வட்டுக்கோட்டை.

### தேடிவரும் அடியார் கூட்டம்

ஆடியிலே நல்லூரின் ஆரம்ப உற்சவத்தை
தேடிவரும் அடியார் கூட்டங்கள் - பாடியே
ஆர்ப்பரித்துக் கூறும் அரோகரா வேல் முருகா
ஈர்க்கும் இறையருளை இங்கு.

தூரத்தூர் மக்கள் சிலர் பாத யாத்திரையாய்
சேர வழியிலே சேரும் மற்ற - றூரவரும்
கூடி வருவார்கள் குமரன் வீழாக்காண
நாடியே நல்லூர் நயந்து
- இறைமணி சி.இராசரத்தினம்.

### அருளாட்சி செய்வான்

நல்லை நகர் நாதனருள்
தாள் பணிந்து தொண்டனிட்டு
முல்லை வன முறுவலிலும்
மூதறிஞர் வாழ்பதியில்
தில்லைத் திருக்கூத்தன்
செய்த தவப் பாலனவன்
தொல்லைகள் தொலையத்
தோழனாய் வந்துதித்து
இல்லை யெனாதீயும் இயல்வாணர்
வாழ்த்திசைப்ப
அல்லல் அகற்றி மிக
அருளாட்சி செய்திடுவான்
- மட்டுவில் க.சி.சதாசிவம்.

### கவலை களைந்திடுவான்

எழில் கொஞ்சும் நல்லையிலே
ஏறுகின்ற கொடி யசைவில்
பொழிகின்ற பொறை யாட்சி
போற்றுகின்ற மறை மாட்சி
விழியாலே நீர் சொரிந்து
வினையறுக்கும் வேண்டு தலால்
களிகூர்ந்து கவலை யெலாம்
களைந்திடுவான் கந்த வள்ளல்
த. விதுரன், சுண்டுக்குளி.

### நல்லூரா விரைந்தோடி வா....

எழுகின்ற கதிருமுன் புகழ் பாடுது
எழிலான நல்லூரில் மயில் ஆடுது
அழுகின்ற மனமுந்தன் பதி நாடுது
அவலங்கள் நீங்கிடவே அருள் வேண்டுது
விழுகின்ற கண்ணீரின் துளி போக்கியே
விடிவொன்று தந்தென்றும் எம்மைக் காக்கவே!
தொழுகின்றோம் நின்றன் பாதங்கள் பணிந்தே
தமிழினம் காக்க நல்லூரா! விரைந்தோடி வா!
- எஸ்.எஸ்.குமாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுடில்லியிடம் கொழும்பு சரணடையவே நிலக்கீழ் மின்கேபிள் திட்டம் வழிகோலும்

## எச்சரிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக.7

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உத்தேச கடலடி மின்சார கேபிள் திட்டம் கொழும்பு, புதுடில்லியிடம் அரசியல் பொருளாதார ரீதியாக சரணடைவதற்கே வழிவகுக்கும் என ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். உத்தேச திட்டம் இலங்கையின் எரிசக்தித் துறையில் இந்தியாவின் கரம் மேலோங்குவதற்கு வழிவகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையால் எந்தக் காரணத்திற்காகவும் குறிப்பிட்ட திட்டத்தைக் கைவிடமுடியாது. மன்னார் வளைகுடா ஊடாக இந்தக் கேபிள் திட்டம் அமைவது எண்ணெய் அகழ்வையும் பாதிக்கும் என்றும் பிமல்ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலதிக மின்சாரத்தை இந்தியாவிற்கு வழங்கும் திட்டம் இலங்கையில் சூழல் மற்றும் சமூக பாதிப்புகளை உருவாக்கும். இந்தியா பிராந்திய வளல்லரசு என்ற காரணத்தினால் அந்தநாடு உடன்படிக்கையை மீறினால் கூட இலங்கையால் எதனையும் செய்ய முடியாது என்றும் பிமல் ரட்நாயக்க கருத்து வெளியிட்டுள்ளார்.

''இந்தத் திட்டத்தின் ஒப்பந்தக்காரர் மதுரையைச் சேர்ந்தவர். விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கான தளமாக மதுரை விளங்குகின்றது'' எனத் தெரிவித்துள்ள ஜே. வி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட நிறுவனத்தின் தென்னிந்திய ஊழியர்கள் முழு நாட்டிற்கும் அச்சுறுத்தலாக அமைவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தியா கைச்சாத்திட்ட எரிசக்தித் திட்டங்கள் தொடர்பாக நேபாளம் உட்படப் பல நாடுகளில் பிரச்சினைகள் தோன்றியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# 'செஸ்' வரியில் 700 கோடி ரூபா மோசடி

## சபையில் கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு

''கடந்த ஐந்து வருடங்களாக அரசால் சேகரிக்கப்பட்ட ஏற்றுமதி தொடர்பான 'செஸ்' வரியில் இருந்து சுமார் 700 கோடி ரூபாவை இந்த அரச மோசடி செய்துள்ளது.''

- இவ்வாறு ஐ.தே.கட்சி எம்.பி. ரவிகருணாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதிலளித்ததைத் தொடர்ந்தே ரவி மேற்கண்டவாறு கூறினார்.

2002ஆம் ஆண்டு முதல் 2007 வரை அரசால் பெறப்பட்ட 'செஸ்' வரித் தொகை எவ்வளவு என்பதே ரவிகருணா நாயக்க எழுப்பிய கேள்வியாகும். இதற்கு தினேஷ் குணவர்த்தன அளித்த பதிலின் விவரம் வருமாறு:-

2002ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரையிலான ஐந்து வருட காலப் பகுதியில் 'செஸ்' வரியாக 1,511 கோடி 60 லட்சம் ரூபாவை அரசு திரட்டியுள்ளது. அவற்றுள் 810 கோடி ரூபா பல்வேறுபட்ட துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

அப்படியாயின் மீதியாகவுள்ள 701 கோடி ரூபா 60 லட்சம் ரூபா பணத்திற்கு என்ற நடந்தது என்று ரவி கேள்வி எழுப்பினார்.

அந்தப் பணம் திறைசேரியில் சேமிப்பில் வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர்கள் தினேஷ்குவர்த்தனவும் கெஹெலிய ரம்புக் வெலவும் பதிலளித்தனர்.

சுற்றுலாத்துறை உட்பட பல துறைகள் வீழ்ச்சியுற்றிருக்கும் நிலையில் சேமிப்பில் இருக்கும் அப்பணத்தை அந்தந்தத்துறைகளுக்கு வழங்கி அத்துறைகளை முன்னேற்றலாம் என்று கூறிய ரவிகருணாநாயக்க, உண்மையில் இந்த மீதிப் பணம் திறைசேரியில் சேமிப்பில் இல்லை என்றும் அரசு அப்பணத்தைத் திருடிவிட்டது என்றும் கூறினார்.

இதை மறுத்த அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல விசேட திட்டங்கள் எவையும் இல்லாமல் இந்தப் பணத்தைச் செலவிட முடியாது என்று கூறினார். (சி)

# வன்முறையைக் கைவிட வேண்டும் ரவிசங்கர் சுவாமி வேண்டுகோள்

புதுடில்லி, ஓக.7

ஜம்மு - காஷ்மீர் மக்கள் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும். வன்முறையைக் கைவிட்டு அஹிம்சை வழியில் போராடவேண்டும் - என்று வாழும் கலை மையத்தின் நிறுவுநர் ரவிசங்கர் சுவாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

அமர்நாத் கோயிலுக்கு முதலில் நிலத்தை வழங்கியமை, பின்னர் அதைத் திரும்பப் பெற்றமை ஆகிய இரு விடயங்களிலும் மாநில அரசு பெரிய தவறைச் செய்துள்ளது. காஷ்மீர் மக்கள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு மிகப்பெரிய தவறைச் செய்கின்றனர்

மக்களுக்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க உரிமையுண்டு. ஆனால், வன்முறையில் ஈடுபடாமல் அமைதியான முறையில் மக்கள் தங்கள் எதிர்ப்பை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். மாநிலத்தில் மத நல்லிணக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (சி)

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.7

அளவெட்டி சைவ வாலிப சங்கம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை வெள்ளிக்கிழமை அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (202)

* * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வலிகாமம் பிரதேசத்தில் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரதீஸ்வரன் தலைமையில் ஆவரங்கால் அருள்முருகன் அறநெறிப்பாடசாலையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரம்மஸ்ரீ ப.சிவாநந்த சர்மா கலந்து கொள்வார். (202-111)

* * *

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் நடத்திவரும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்.கந்தர்மடம் ஸ்ரீ நடராஜப்பெருமான் ஆலயத்திலும் காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சுவாமி ஆலயத்திலும் நடைபெறவுள்ளது. (202)

# சார்க் தலைவர்கள் வியப்பு! - சபாநாயகர் உலக நாடுகள் திகைப்பு!! - ஐ.தே.கட்சி

கொழும்பு, ஓக. 07

இலங்கைக்கு வந்த சார்க் தலைவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தின் அழகைப் பார்த்து வியந்துபோயினர் என்று நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சபாநாயகர் சொல்லிப் புளுகப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில், இடைமறித்த ஐ.தே.கட்சி எம்.பி. ஒருவர், ''சார்க் தலைவர்கள் வியந்தமை இருக்கட்டும், இந்தியப்பிரதமருக்குப் பாதுகாப்பு வழங்கவென நியமிக்கப்பட்ட அதிகாரி திடீரெனத் தலைமறைவாகிப் போனமையையும் - இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் வாடகைக் காரில் ஹோட்டலுக்கு வந்தமையையும் பார்த்து உலகமே திகைத்து நிற்கிறது என்று தெரிவித்தார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் ரவி கருணாநாயக்க கேள்வி ஒன்றை எழுப்பிய போது குறுக்கீடு செய்த சபாநாயகர் நாடாளுமன்றத்தின் அழகு பற்றிய தனது புளுகத்தை வெளியிட்டார்.

''நாடாளுமன்றத்தை சார்க் நாடுகளின் தலைவர்கள் வந்து பார்த்தனர். இதன் அழகைப் பார்த்து அவர்கள் வியந்து விட்டனர்.

''இந்த நாடாளுமன்றத்தை நிர்மாணிக்கும்போது பல குற்றச்சாட்டுகள் எழுந்தன. இது இடிந்து விழும் என்றும் சிலர் கூறினர். ஆனால், சார்க் நாடுகளின் தலைவர்கள் இதைப் புகழ்ந்து தள்ளியுள்ளனர்; வியந்து நிற்கின்றனர்.'' - என்றார்.

அப்போது குறுக்கீடு செய்த ஐ.தே.கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர,

''மன்மோகன் சிங்கின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் திடீரெனக் காணாமல் போயிருந்தார். மன்மோகன் சிங் அந்தப் பாதுகாப்பு உத்தியோகத்தர் இல்லாமலேஹோட்டலுக்குச் சென்றார்.

அதேபோல் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் வாகனம் இல்லாமல், பாதுகாப்பு இல்லாமல் வாடகை வாகனத்தில் ஏறி ஹோட்டலுக்குச் சென்றார்.

நாடாளுமன்றத்தைப் பார்த்து சார்க் நாடுகளின் தலைவர்கள் வியந்ததை விடவும் மேற்படி சம்பவங்களைப் பார்த்துத்தான் இந்த உலகமே வியந்தது.

எமது படையினரால் மன்மோகன் சிங்கிற்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. அதனாலேயே அவருடன் இந்தியப் படையினர் வந்தனர் - என்றார். (சி)



மக்கள் வங்கியின் 47ஆவது ஆண்டு பூர்த்தி நிகழ்வு சாவகச்சேரிக் கிளையில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வினை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் உட்பட வங்கி அலுவலர்கள் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

அன்றைய தினம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் மக்கள் வங்கியின் 'சிசு உதான' அலகை ஆரம்பித்து வைத்த மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் சு.ஹென்றி முதல் வைப்புத் தொகையினை மாணவியொருவரிடம் பெற்றுக் கொள்வதையும் அருகில் கிளைமுகாமையாளர் க.சண்முகலிங்கம், கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் மற்றும் வங்கி அலுவலர்களும் கல்லூரி ஆசிரியர்களும் நிற்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம். *(படங்கள்: தென்னவன்)*

# வாசகர் திருமுகத்துக்குப் பதில்

## ஆழிப்பேரலை வீடமைப்புத் திட்டம்

செ.கதிர்காமலிங்கம் என்பவரின் ஆழிப்பேரலை வீடமைப்புத் திட்டம் தொடர்பாக 01.08.2008 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வாசகர் திருமுகத்தில் பிரசுரிக்கப்பட்ட விடயம் தொடர்பாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் பின்வரும் விளக்கத்தைத் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர் சுனாமியால் பாதிக்கப்பட்டு 'நீகோட்' திட்டத்தின் கீழ் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டிருந்தும் பின்னர் நிறுவனங்கள் மூலம் துணைநிதி வழங்க எம்மாலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனாலும் இத்திட்டம் கட்டாயமாக வழங்கப்படவேண்டியதில்லை. இந்த உலக வங்கித் திட்ட 250,000 ரூபாவைப் பெற்ற 1874 பயனாளிகளும், 'நீகோட்' திட்டத்தினூடாக 250,000 ரூபாவைப் பெற்ற 65 பயனாளிகளும் எமது பிரிவில் உள்ளனர். ஆனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் துணை நிதிகளை நிறுவனங்களினூடாக வழங்க கேட்டுவருகின்றோம். அதன் முதற்கட்டமாக யு.என்.ஹபிட்டட், லயன்ஸ் ஆகிய நிறுவனங்கள் முன்வந்து இத்துணை நிதியினை வழங்கி வருகின்றன. யு.என்.ஹபிட்டட் நிறுவனம் தொண்டைமானாற்றிலிருந்து ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. மற்றும் லயன்ஸ் நிறுவனமானது குழு அடிப்படையில் 20 அல்லது இதற்கு மேற்பட்ட வீடுகளுக்கு இணைந்த நிதியினை வழங்கி வருகின்றது. எனவே மேற்படி நபரது (J/393) பிரிவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது இவருக்கு இந்நிதி கிடைக்கப்பெறும் என்பதைத் தெரிவிக்கின்றேன்.

ஆர்.வரதீஸ்வரன்
பிரதேச செயலர்.
பருத்தித்துறை.

# வடமராட்சியில் சில கிராமசேவகர்கள் குறிப்பிட்ட நேரங்களில் கடமையில் இல்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் முறைப்பாடு

உடுப்பிட்டி,ஓக.7

வடமராட்சியில் சில கிராமசேவகர்கள் மக்களுக்கென ஒதுக்கப்பட்ட நாள்களில் உரிய நேரத்தில் அவர்களின் செயலகங்களில் இருப்பதில்லையென மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

மக்கள் தொடர்பிற்காக நேரம் குறித்து ஒதுக்கப்பட்ட நேரங்களில் சம்பந்தப்பட்ட கிராமசேவகர்கள் இல்லாமையால் பொது மக்கள் பல மணிநேரம் அலுவலகம் முன்பாகக் காத்துநிற்கவேண்டியுள்ளது. அத்தோடு தமது ஏனைய வேலைகள் பாதிப்புற்ற நிலையிலேயே வீடு திரும்புவதாகத் தெரிவிக்கின்றனர்.

கிராமசேவை அலுவலர்கள் தமது அலுவலகங்களிற்கு முன்பாக விளம்பரப் பலகைகளிலோ அல்லது விளம்பரச் சுலோகமாகவோ தமது தாமதத்திற்கான காரணங்களைத் தெரிவிக்கும் பட்சத்தில் பொதுமக்கள் கிராமசேவகருக்காகக் காத்துநிற்கும் கால, நேர விரயத்தைத் தடுத்துக் கொள்ளலாம்.

இது விடயத்தில் பிரதேச செயலர்களோ அல்லது பிரதேச உயர் கிராமசேவை உத்தியோகத்தரோ கவனம் செலுத்தி உதவுமாறும் பாதிப்புற்றப் பொதுமக்கள் வேண்டுகின்றனர். (202-155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# டாபூர் பிரதேசத்தை ஒத்ததாக மாறிவரும் இலங்கைத் தீவு

பண வீக்கம், விலைவாசி என்பன கிடுகிடு என எகிறி வானைத் தொட்டு நிற்கும் பின்புலத்தில், அன்றாட சீவியத்துக்கான வயிற்றுப்பாட்டுக்கு உணவு பெற முடியாத இக்கட்டில் - சிக்கலில் - சாதாரண குடும்பம் ஒவ்வொன்றும் சிக்கித் தவிக்கும் பேரவல நிலைமை இன்று உருவாகியிருக்கின்றது.

அடிப்படைத் தேவைகளுக்குரிய அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாத அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும் வரவு - செலவுத் திட்டம் கையை மீறிச் சென்றுகொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் சூடானின் டாபூர் நிலைமையை ஒத்த மோசமான பட்டினி நிலையை இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் பேராபத்துக் கட்டம் சூழ்ந்து - நெருங்கி - வருவதாக முக்கிய ஆய்வு மையங்களும், நிறுவனங்களும் எச்சரித்திருக்கின்றன.

இந்தப் பின்புலத்தில் இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து - சாதாரண மக்களின் வாழ்வாதார நிலைமைகள் பற்றி - இலங்கையின் முக்கிய ஆய்வு மையம் மக்கள் கணிப்பைக் கண்டறிந்துள்ளது.

அந்த ஆய்வின்படி -

* நாட்டில் முக்கிய - மிக அத்தியாவசிய - பொருள்களின் விலைகள் நெருக்கடிக் கட்டத்தை அடைந்து விட்டன என்பதை 96 வீதமான மக்கள் ஆமோதித்திருக்கின்றார்கள்.
* இந்த நெருக்கடிக் கட்டத்துக்கு அரசுதான் பொறுப்பு என்று 82 வீதமான இலங்கை மக்கள் கருதுகின்றார்கள். அரசு மீது குற்றம் சுமத்த முடியாது என்போர் ஆகப் பதினாறு வீதத்தினர் மட்டுமே.
* வெளிநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கான விநியோகமும் கேள்வியும் அதிகரித்திருப்பதும் உள்நாட்டில் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்ற கருத்தை இலங்கை நாட்டு மக்களில் 72 வீதமானோர் ஏற்றுக் கொள்ளுகின்றனர். விடை தெரியாது என்று பதினாறு வீதத்தினர் கூறுகின்றனர். அத்தியாவசியப் பொருள்களுக்கு வெளிநாடுகளில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடும் கேள்வி அதிகரிப்பும் இலங்கையில் விலைவாசி அதிகரிப்புக்குக் காரணம் என்ற நியாயத்தை நாட்டு மக்களில் 12 வீதத்தினர் ஏற்கவில்லை.
* இன்றைய பொருளாதார இக்கட்டு நிலையைச் சமாளித்து, மக்களுக்கு உதவுவதற்காக அத்தியாவசியப் பொருள்களுக்கு அரசு மேலும் மானியமளித்து, பொருள்களின் விலையைக் குறைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாட்டு மக்களில் 78 வீதத்தினர் கருத்து வெளியிட்டிருக்கின்றார்கள்.

- இவையே மேற்படி ஆய்வுகளில் - மக்கள் கருத்துக் கணிப்பில் - வெளியான முடிவுகளாகும்.

இன்று இத்தகைய மோசமான பொருளாதார நெருக்கடி நிலைமை ஏற்பட்டு, மக்கள் தமது வாழ்வியலுக்கான அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாது அந்தரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டமைக்கு - அரசே - அரசின் நிர்வாகச் சீர்கேடுகள், வீண் விரய நடவடிக்கைகள், ஊதாரித்தனமான செயற்பாடுகள், தவறான ஆட்சி முறைகள் என்பனவே - காரணம் என்று எண்பது வீதமான மக்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றார்கள்.

பொதுச்சொத்தை சீரழிக்கும் செயற்பாட்டுக்கு உதாரணமாக 'மிஹின் ஏயார்' நிறுவனச் சீர்கேட்டை இந்த ஆய்வில் கருத்து வெளியிட்ட பொதுமக்கள் பலரும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். இந்த விமான சேவை நிறுவனத்தை உருவாக்கி, செயற்படுத்தியதன் மூலம் பல நூறு கோடி ரூபா அரசநிதி எவ்வாறு வீண் விரயமாக்கி, அழிக்கப்பட்டது என்பது இன்று பரகசியமான விவகாரமாகும். அதைச் சுட்டிக்காட்டியதன் மூலம் இன்றைய குளறுபடி நிலைக்கு அரசுத் தலைமையே பொறுப்பும் பின்னணியும் என்று பொதுமக்கள் நேரடியாகவே குற்றம் சுமத்தியிருக்கின்றார்கள்.

இதற்கிடையில் -

இலங்கையின் நான்கு சிறுவர்களுள் ஒருவர் போசாக்கின்மையால் வாடுகின்றனர் என்ற அதிர்ச்சி தரும் புள்ளி விவரத்தை 'யுனிசெவ்' அமைப்பும் வெளியிட்டிருக்கின்றது.

அந்த அமைப்பின் ஆய்வுகளின்படி இலங்கைச் சிறுவர்களில் 22 வீதத்தினர் எடை குறைந்தவர்கள். மேலும் 18 வீதத்தினர் வளர்ச்சி குன்றியவர்கள்.

இந்த ஆய்வுகள் தரும் புள்ளி விவரங்களும் கணக்குகளும் சரியானவை என்றால் -

இனப்பிரச்சினை, கொடூர யுத்தம், பேரழிவுகள், மோசமான மனித உரிமை மீறல்கள், அரசு ஆதரவுத் துணைப்படைகளின் ஆதரவோடு முன்னெடுக்கப்படும் அரச பயங்கரவாதச் செயற்பாடுகள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றில் மட்டுமல்லாது, பட்டினிச்சாவு உட்பட்ட போஷாக்கின்மைப் பிரச்சினைகளிலும் டாபூர் தேசத்தை ஒத்ததாக இலங்கைத் தீவு உருவாகப் போகின்றது என்பதே அர்த்தம்.

சூடானின் அரசுத் தலைவருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு சுமத்தப்படும் நிலைமை அந்த நாட்டில் ஏற்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்தகைய கட்டத்தையும் தாண்டி இலங்கை நிலைமை சென்றாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதே அவதானிகளின் கருத்தாகும்.

## விற்பனை மூலம் அதிக வருமானம் ஈட்டிய கிளை முகாமையாளர்களுக்குப் பணப் பரிசுகள்

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை கிளை நிலையங்களில் கடந்த ஜூலை மாதத்தில் ரொக்க வியாபாரத்தில் கூடிய விற்பனையை மேற்கொண்ட கிளைமுகாமையாளர்களுக்கு ஊக்குவிப்புப் பணப் பரிசுகள் வழங்கப்பட்டன.

சங்கத்தின் கேட்போர் கூடத்தில் சங்கத் தலைவர் ப.கிரிதரன் தலைமையில் நேற்றுக்காலை நடந்த இந்தநிகழ்வில் ஜூலை மாதத்தில் அதிக விற்பனையை மேற்கொண்ட கிளை நிலையங்களின் கிளை முகாமையாளர்களுக்கும் அதன் விற்பனையாளர்களுக்கும் இந்த ஊக்குவிப்பு பணப்பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த ஊக்குவிப்பு பரிசில்களை சங்கத்தின் பொதுமுகாமையாளர் து.மனோகரன் வழங்கினார்.

அத்துடன் யாழ்.பிரதான வீதியில் அமைந்திருக்கும் சங்கத்தின் கூட்டுறவு நகர் விற்பனையகம், சங்க உணவகம் போன்றவற்றின் முகாமையாளர்களுக்கும் இந்த ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சங்க இயக்குநர் எஸ். டோமினிக், கணக்காளர் எ.குமணதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (50-224)

## கல்வி டிப்ளோமா பரீட்சை இம்மாத இறுதியில்

யாழ்ப்பாணம், ஓக.7

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா முதலாம் வருடப் பரீட்சைகள் இம்மாதம் 31ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன என்று தேசிய கல்வி நிறுவகத்தின் பிராந்திய இணைப்பாளர் திருமதி த.வில்வநாதன் தெரிவித்துள்ளார். (04)

## நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்திற்கான வாகனப் போக்குவரத்து ஏற்பாடுகள்

நல்லூர், ஓக.7

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நேற்று புதன்கிழமை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை அரசடிச்சந்திக்கும் 2ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை வீதி, பிராமணக் கட்டுக்குளம் சந்தியில் இருந்து சங்கிலியன் சந்திக்கு இடைப்பட்ட கோயில் வீதி, செட்டித்தெரு ஆகிய வீதிகள் வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

பேரூந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியில் இருந்து நாவலர் வீதி, கச்சேரி, நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தியூடாகச் செல்வதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதிவழியாக பேரூந்துகளும் சிற்றூர்திகளும் செல்வதற்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களை முத்திரைச் சந்திப் பகுதியில், சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியிலும் கந்தர்மடம் சந்திக்கு அப்பால் அரசடி வீதியிலும், அம்மன் வீதி பருத்தித்துறைச் சந்திக்கும் அப்பால் பருத்தித்துறை வீதியிலும் செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பாலும் நிறுத்தி வைக்கமுடியும் எனவும் ஆணையாளர் மேலும் அறிவித்துள்ளார். (50-111)

### திருவிழாக் காலத்தில் வாகனங்களை நிறுத்த தரிப்பிடம் இல்லை

நல்லூர் ஆலய சுற்றாடலில் கோயில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள வீதித்தைப் பகுதியில் இந்தவருடம் வாகனத் தரிப்பிடம் அமைக்கப்படவில்லை.

ஆலய தரிசனம் செய்ய சைக்கிள், மோட்டார் சைக்கிளில் வருகை தரும் பக்தர்கள் தங்கள் வாகனங்களை முன்னால் உள்ள குறுக்கு வீதியிலும் திறந்து விடப்பட்ட காணி ஒன்றிலும் நிறுத்தி வைக்க வேண்டியுள்ளது.

வீதியில் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் நிறுத்த முடியாததால் திறந்த வளவில் நிறுத்துமாறு கேட்கப்படுகின்றனர். பற்றைகள், முள்ளுச் செடிகள் நிறைந்த இடத்தில் நிறுத்துவதால் சிரமப்படவேண்டி இருப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. வாகனங்கள் சரிவர நிறபாட்டி வைக்கப்படாததால் திரும்ப எடுப்பதில் பலத்த சிரமம் நிலவுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (202-302)

## அமைச்சர் மேர்வினுக்கு ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு, ஓக.7

பொலிஸார், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் அமைச்சர் மேர்வின் சில்வா சிரச ஊடகவியலாளர்களைத் தாக்கிய சம்பவம் குறித்து சுதந்திர ஊடக இயக்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமைச்சரின் செயல் அவமானகரமானது, வன்முறையானது எனத் தெரிவித்துள்ள சுதந்திர ஊடக இயக்கம், அரசாங்க அமைச்சர் ஒருவரால் ஊடக சுதந்திரம் அவமானப்படுத்தப்பட்ட மற்றுமொரு சம்பவம் இதுவென்றும் தெரிவித்துள்ளது.

சம்பவம் நடைபெற்ற வேளை அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் எவரும் இதனைத் தடுக்க முயலாமை குறித்தும் சுதந்திர ஊடக இயக்கம் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

'சிரச' தொலைக் காட்சியின் செய்தி இயக்குநர் குறிப்பிட்ட அமைச்சருக்கு எதிராக பொலிஸில் மூன்று தடவைகள் முறைப்பாடு செய்துள்ள போதிலும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாததையும் அந்த இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சமீபத்தில் நடைபெற்று முடிந்து சார்க் உச்சிமாநாட்டில் இலங்கையில் ஊடக சுதந்திரம் காணப்படுவதாக தெரிவித்த அரசு, இந்த அமைச்சரை தண்டிக்க முடியாத நிலையிலுள்ளது என்றும் ஊடக இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசியலில் உயர் பதவிகளில் உள்ளவர்களிலிருந்து குறிப்பிட்ட அமைச்சருக்குப் பாதுகாப்பு கிடைக்கும் அதேவேளை பத்திரிகையாளர்கள் தாங்கள் தாக்கப்படலாம் என்ற அச்சத்துடன் வாழ வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

**சேது திட்ட உண்ணாவிரதப் போராட்ட வழக்கில்**

## கைது உத்தரவு விடுக்கப்படுமென கருணாநிதிக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

புதுடில்லி, ஓக. 07

சேதுசமுத்திரத்திட்ட உண்ணாவிரதப் போர் தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பதில் அளிக்காவிட்டால் கைது உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று தமிழக முதல்வர் கருணாநிதி மற்றும் மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு ஆகியோரை உச்ச நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

உச்ச நீதிமன்றம் விதித்த தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தினர் எனக் கூறி முதல்வர் கருணாநிதி, மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு, தலைமைச் செயலாளர் டி.ஜி.பி. ஆகியோர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா தொடர்ந்தார். இதுபற்றி விளக்கம் கேட்டு கடந்த ஆண்டு ஒக்டோபர் முதல் வாரத்தில் தமிழக அரசுக்கும் முதல்வருக்கும் உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது.

அதற்கு இதுவரை பதில் அளிக்கப்படவில்லை, நீதிபதிகள் பி.என்.அகர்வால், ஜி.எஸ்.சிங்வி ஆகியோர் இவ்வழக்கைத் திங்கட்கிழமை விசாரித்தனர். விளக்கம் கேட்டு அனுப்பப்பட்ட நோட்ஸுசுக்கு இதுவரை பதில் அளிக் கப்படவில்லை. இதற்காக முதல்வர் கருணாநிதி, மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு ஆகியோருக்கு பிடிவிறாந்து பிறப்பிப்போம்' - என்று எச்சரித்தனர்.

எனினும் நோட்டீஸுக்கு பதில் அளிக்கத் தமிழக அரசுக்கு மேலும் 4 வாரம் அவகாசம் அளித்தனர். நோட்டீஸுக்கு இதுவரை பதில் அளிக்காதது ஏன் என்று அவர்கள் விளக்கமளிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மாநிலத்தின் முதல்வராக இருப்பவர் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் அல்லர். இதுதான் உங்கள் போக்கு என்றால் முதல்வரும் மற்றவர்களும் நீதிமன்றத்தில் ஆஜராகட்டும். அவர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நாங்கள் உத்தரவு பிறப்பிக்கிறோம் - என்றனர் நீதிபதிகள். (சி)

### நாளை

| | |
|---|---|
| ஆடி 23 | 08.08.2008 |
| | வெள்ளிக்ழக்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | பி.ப. 03.14 வரை |
| நட்சத்திரம் : | சுவாதி |
| | மு.இ.11.24வரை |
| சுபநேரம் : | 06.04 - 07.34 |
| ராகுகாலம் : | 10.34 - 12.04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 ஆண்டு காலத்துக் காரின் கதை இது!

வயதான காலத்தில் பால்ய நண்பனின் நினைவு வந்து அவரைப் பார்க்க ஆசைப்படலாம். ஆனால், வாலிப வயதில் வாங்கி, விற்று விட்ட காரை மீண்டும் மீண்டும் வாங்கியே தீருவது என்ற முடிவில் வென்ற இங்கிலாந்து முதியவரை என்ன செய்வது?

ஆம், லண்டனைச் சேர்ந்தவர் டேவிட் ஆஸ்டன் (வயது-69). இவர் ஐம்பது ஆண்டு களுக்கு முன் 19 வயது இளைஞனாக இருந்தபோது ஆசை ஆசையாக ஓஸ்டன் செவன் மொடல் காரை வாங்கினார். அவர் வாங்கிய விலை 1,900 ரூபா. காரில் வலம் வந்த அவருக்கு காதலி சிக்கினார். 'உங்களை விட உங்கள் காரைப்பார்த்துதான் காதலித்தேன்' திருமணத்தின் போது டேவிட்டிடம் காதலி சொன்னது இது. அப்படி ஒரு மச்சமுள்ள காரை பண நெருக்கடியால் (பின்னே....திருமணம் ஆகிவிட்டதே!) 2 ஆண்டுகளில் 1960 இல் விற்றார் டேவிட்.

பாவிக்கப்பட்ட கார் என்பதால் விற்பனையில் அவருக்குக் கிடைத்தது வெறும் 672 ரூபா. இப்போது பேரன், பேத்தி எடுத்துவிட்ட டேவிட்டுக்கு திடீரென தனது ராசியான காரின் நினைவு வந்தது. அதை எப்படியாவது தேடிப் பிடித்து வாங்க முடிவு செய்தார்.

இணையத்தளத்தில் அதன் பதிவு எண்ணை தெரிவித்து, வைத்திருப்பவர் தொடர்பு கொள்ளக் கேட்டுக்கொண்டார். பிரிஸ்டல் என்பவரிடம் கார் இருப்பது தெரிய வந்தது. பேரம் பேசினார் டேவிட். 'நல்ல சமயமடா, நழுவ விடலாமோ' என்று நினைத்த பிரிஸ்டல், அந்தக் காரிற்கு 5 லட்சம் ரூபா நிர்ணயித்தார்.

என் செல்லக்காருக்கு இதுக்கு மேல் கேட்டிருந்தாலும் கொடுத்திருப்பேன் என்று கொடுத்து வாங்கி விட்டார் டேவிட். அது பற்றி அவர் பெருமிதமாக கூறுகையில், "ஏதோ 50 ஆண்டுகளுக்குப் பிறகு பால்ய நண்பனை மீண்டும் பார்த்தது போலிருக்கிறது. எனது குடும்பத்திற்கு இந்தக் கார் புதுமுகமாகவும், எனக்கு பரிச்சயமானதாகவும் வித்தியாச அனுபவத்தைத் தருகிறது" என்றார்.

# தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் II (நீகோட் II)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆ.அ. வ" கடன் இல . 2168 - SRI (SF)
"ஆ.அ. வ" நன்கொடை இல . 0007 - SRI (SF)

## யாழ் மாவட்ட நிர்மாண வேலைக்கான கேள்வி அறிவித்தல் இல: 09

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD-II) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தத்தின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக பின்வரும் ஒப்பந்தத்திற்கு தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறி வைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | வரி சேர்க்கப்படாத ஆகுசெலவும் ஒப்பந்தகாலமும் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் ( ரூபா ) |
|---|---|---|---|---|---|
| 01 | JF/NECORD-II/ED/25 | பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 140' x 50' அளவுடைய ஒன்றுகூடல் மண்டபம் மீளமைத்தல் - 1ஆம் கட்டம் | ரூபா. 5.4 மில்லியன் / 5 மாதங்கள் | M6(கட்டடங்கள்) | 55,000/= |
| 02 | JF/NECORD-II/HS/12 | உரும்பிராய் ஆரம்ப மருத்துவ பிரிவிற்கு வெளி நோயாளர் பிரிவு கட்டடம் அமைத்தல். | ரூபா. 6.8 மில்லியன் / 5 மாதங்கள் | M6(கட்டடங்கள்) | 70,000/= |
| 03 | JF/NECORD-II/HS/14 | சங்கானையில் மூலிகைத் தோட்டம் அமைத்தல் | ரூபா. 2.9 மில்லியன் / 4 மாதங்கள் | M7(கட்டடங்கள்) | 30,000/= |
| 04 | JF/NECORD-II/WS/01 | கரவெட்டி நீர் வழங்கல் திட்ட புனர் நிர்மாணம் செய்தல். | ரூபா. 17.3 மில்லியன் / 6 மாதங்கள் | M5(நீர் வழங்கல், வடிகால்அமைப்பு) | 175,000/= |
| 05 | JF/NECORD-II/IR/01 - Package II | யாழ்.தீபகற்பத்தில் அமைந்துள்ள 10 உவர் நீர் தடுப்பு அணைகள் மீளமைத்தல் - தொகுதி 2(சண்டிலிப்பாய்கல்லுண்டாய் தடுப்பு அணை, சங்கானை அராலி தடுப்பு அணை) | ரூபா. 10.1 மில்லியன் / 5 மாதங்கள் | M5(நீர்ப்பாசனம்) | 102,000/= |
| 06 | JF/NECORD-II/RD/01 | வேலணையில் அல்லைப்பிட்டி மண்கும்பான் வீதி புனரமைத்தல் | ரூபா.9.3 மில்லியன் / 5 மாதங்கள் | M6(பெருந்தெருக்கள்) | 95,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   i) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   ii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.
   iii) "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   iv) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   v) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், நீகோட், கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 021-2223625, தொலைநகல்: 021- 2225163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk
6. ஒப்பந்த ஆவணங்கள் ஆவணி மாதம் 7ஆம் திகதி 2008 முதல் ஆவணி மாதம் 21ஆம் திகதி 2008 வரை முற்பகல் 9.00 மணியிலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, நீகோட், கச்சேரி, யாழ்ப்பாணம்" இற்கு ஆவணி மாதம் 28ஆம் திகதி 2008 மு.ப. 11.30 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் ஆவணி மாதம் 19ஆம் திகதி 2008 முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

கே.கணேஷ்,
தலைவர் மாவட்டக் கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

## நேற்றைய (06.08.2008) உதயனில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 03 இன் விடைகள்


**வினாத்தாள் - 01**

01-2, 02-1, 03-3, 04-1, 05-3, 06-2, 07-1, 08-1, 09-2, 10-3, 11-1, 12-3, 13-1, 14-2, 15-2, 16-3, 17-85 என்பதே சரியானது (விடை வினாவில் இல்லை), 18-1, 19-3, 20-1, 21-3, 22-1, 23-3, 24-3, 25-3, 26-2, 27-1, 28-2, 29-2, 30-1, 31-சிவா, குமார், 32-36வயது, 33-H, 34-8செங்கற்கள், 35-32cm, 36-11.55, 37-அல்லும் பகலும் நாம் பாடுபட்டு உழைக்க வேண்டும், 38-உடலின் உறுதி உடையவரே உலகில் இன்பம் உடையவராம், 39-A, 40-28கோழிகள்.

**வினாத்தாள் - 02**

01- 01-தளர்வோருக்கு, 02-வண்ண/கன்னல், 03-மனிதனாய் வாழவேண்டும், 04-குஞ்சு, 05-கடினம்+உழைப்பு, 06-அன்பு, 07-மடமையை, 08-தளர்வோர், 09-செயல்/பணி, 10-இகழ், 02- 01-தாயின் அன்பைப்போல் வேறு எதுவுமில்லை, 02-மரங்கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்டன. 03- 01-ஓடும் புளியம்பழமும் போல அவன் பழகினான், 02-வலையில் சிக்கிய மான் போல காயத்தால் அவன் துடிதுடித்தான். 04- 01-சிறு துளி பெரு வெள்ளம், 02-அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. 05- 01-fish, 02) 01- Watch, 02-Motor cycle 06- 01-இடியப்பம், 02-ஆகாயவிமானம், 03-நீர்வீழ்ச்சி. 07- 01-ஹிச, 02-அத்த, 03-குல. 08- 01-நீங்கள் சாப்பிடுங்கள். 09-4, 10-(), 11-3, 12-2, 13-2, 14-1, 15-2, 16-4, 17-3, 18-3, 19-1, 20-2, 21-4, 22-() 23-4, 24-4, 25-2, 26-1, 27-4, 28-சிகிரிய ஓவியம், 29-பொலன்னறுவைச் சிவன்கோயில், 30-கம்பளை இலங்காதிலக விகாரை 31-தலதா மாளிகை, 32-வேங்கை, 33-ஆமணக்கு, 34-சீதேவியார் செங்கழுநீர், 35-ஆச்சி 36-01-4, 02-4, 37-15 ம, 38-5799kg 950g, 39) 01-28, 02-12cm2 40-3 வினாடி, 41-33, 42-16cm, 43-5மணித்தியாலம் 55நிமிடம், 44-1cm, 45-57 பேர், 46-4 மாணவர்கள், 47- 27 பேர், 49- (4/8)/(1/2), 50-4,3 51-56 வரை கருத்துள்ள வாக்கியங்கள்.

48 ஆம் வினாவிற்கான வரைபு




விடைகளில் சந்தேகங்கள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளலாம்.
**011-2399666/071-6850005/071-4273035**

## கண்ணீர் அஞ்சலி



எங்களது அன்பு மாமா இராமலிங்கம் இராசலிங்கத்தின் அன்பு மனைவி
**இராசலிங்கம் கிருஸ்ணவேணி**
(சோதி) 24.07.2008 அன்று கனடாவில் காலமானார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
சி.நடராசா
ரதி குடும்பம், மாலா குடும்பம்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (77005)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
PACKED BY:
ROYAL Industries Colombo 12
☎: 0112334603
அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:-
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சுப்பையா ஆச்சாரி இரத்தினம் (ஆச்சாரி)**

தோற்றம்
02.08.1957

மறைவு
14.08.2006

திதி: சஷ்டி (07.08.2008)



எங்கள் குடும்ப குல விளக்கே!
எங்களை வாழ வைத்த தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு ஓடின
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

44/6, கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி உலாவைத் தொடங்கியது ஒலிம்பிக் ஜோதி

பீஜிங், ஒகஸ்ட் 7

29ஆவது ஒலிம்பிக் போட்டிக்கான ஜோதி தனது கடைசி உலாவை நேற்றுத் தொடக்கியது. ஒலிம்பிக் நடைபெறும் இடங்களுக்கு இந்த ஜோதி மூன்று நாள்கள் பயணிக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பல்வேறு நாடுகளில் பல்வேறு தடைகளை மீறி கடந்த மாதங்களில் ஒலிம்பிக் ஜோதி பயணித்திருந்தது. பிரிட் டன், அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் ஒலிம் பிக் ஜோதியின் ஓட்டத்துக்கு திபெத் ஆதரவாளர்க ளால் எதிர்ப்புக்கள் கிளம்பியிருந்தன. எனினும், வெற்றிக ரமான பயணங்கள் பலவற்றின் பின்னர், எவரெஸ்ட் சிகரத்தையும் ஒலிம்பிக் ஜோதி அடைந்திருந்தமை குறிப் பிடத்தக்கது. இந்நிலையில் கடந்த மாத நடுப் பகுதியில் ஒலிம்பிக் ஜோதி சீனாவைச் சென்றடைந்து அங்குள்ள பல நகரங்களுக்கு எடுத்துச் செல்லப்பட் டிருந்தது.

இந்நிலையில் ஒலிம்பிக ஜோதியின் கடைசி உலா நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவர் ஹெயின்வெர்ப்ருகர், ஒலிம்பிக் ஜோதியை புகழ்பெற்ற டினமென் சதுக்கத்துக்கு எடுத்து வந்து கடைசி உலாவை ஆரம்பித்து வைத்தார்.

நேற்றுத் தொடக்கம் மூன்று நாள்கள் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடங்களைச் சுற்றிப் பயணிக்கவுள்ள ஒலிம்பிக் ஜோதி, நாளை நடைபெறும் தொடக்கவிழா நிகழ்ச்சிக்காக நஷனல் ஸ்டேடியத்துக்கு எடுத்துவரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவர் ஹெயின்வெர்ப்ருகர் கடைசி உலாவுக்காக ஒலிம்பிக் ஜோதியை டினமென் சதுக்கத்துக்கு எடுத்து வந்தார்.

# ஊக்கமருந்துச் சோதனையின் பின்னர் விளையாடுவதற்கு தகுதி நீக்கம் பெற்றோர்

## பிறரின் சிறுநீர் மாதிரிகளைக் கொடுத்து 7 பேர் மாட்டினர்!

பீஜிங்கிங், ஓக.7

பீஜிங்கில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டியில் ஊக்க மருந்து சர்ச்சை எழக்கூடாது என்பதில் நிர்வாகிகள் உறுதியுடன் உள்ளனர். இதற்காக ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் வீரர், வீராங்கனைகளுக்கு ஒருமாதம் முன்னதாகவே ஊக்கமருந்துச் சோதனை நடத்தப்பட்டு வருகின்றது. இப்படி நடந்த சோதனையில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பலர் ஊக்க மருந்து பயன்படுத்தியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவர்கள் எல்லோரும் ஒலிம்பிக்கில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஊக்கமருந்துச் சோதனையில் பிடிபட்டதால் பீஜிங் ஒலிம்பிக்கில் தடைசெய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

* கிரேக்க பளுதூக்கும் அணி வீரர்கள் 11 பேர்.
* பல்கேரிய பளு தூக்கும் அணியின் ஒட்டு மொத்த 11 வீரர்களும்.
* அமெரிக்க நீச்சல் வீராங்கனை ஜெசிகா ஹார்டி.
* இத்தாலி வாள்வீச்சு வீரர் ஆண்ட்ரியா பால்டினி, சைக்கிள் பந்தய வீராங்கனை மார்தா பாஸ்டியனெல்லி.
* டென்மார்க் பைக் சாம்பியன் (மலைப்பகுதி) பீட்டர் ரிஸ் ஆண்டர்சன்.
* சீன நடை பந்தய வீரர் சாங்ஹாங்ஜுவான், நீச் சல் வீரர் அவுயாங் குன்பெங், மல்யுத்த வீரர் லுவோ மெங்.
* ரோமானிய ஓட்டப்பந்தய வீராங்கனைகள் லிலியானா போபெஸ்கு. எலினா அன்டோசி , கிறிஸ்டினா.
* ஊக்கமருந்து சோதனையில் பிடிபடாமல் இருப்பதற்காக ரஷ்ய தடகள வீரர், வீராங்கனைகள் 7 பேர் தங்களின் சிறுநீர் மாதிரிகளைத் தராமல் வேறு நபர்களின் சிறுநீர் மாதிரிகளைக் கொடுத்து மாட்டிக் கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவர்களில் 5 பேர் ஏற்கனவே ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்டவர்கள். 800 மீற்றர் மற்றும் 1,500 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனை படைத்துள்ள யெலினா சோபோலெவா, 1,500 மீற்றர் ஓட்டத்தில் இரண்டு முறை உலகச் சாம்பியன் பட்டம் வென்ற டாஷியானா டோமஷோவா உட்பட இவர்கள் அனைவரும் பீஜிங் போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

# ஒலிம்பிக்கில் ருவென்ரி/20 போட்டி; முன்னணி கிரிக்கெட் வீரர்கள் ஆதரவு

புதுடில்லி, ஓக.7

ஒலிம்பிக்கில் ருவென்ரி/20 கிரிக்கெட் இடம்பெற வேண்டும் என்று அண்மையில் கில்கிறிஸ்ற் முன்வைத்த கருத்துக்கு இந்தியாவின் கங்குலி, யுவராஜ், லக்ஸ்மன் இலங்கையின் சங்ககார, ஆஸ்திரேலியாவின் ஸ்ரீவ் வோ மற்றும் நியூஸிலாந்தின் பிளமிங் ஆகியோர் ஆதரவு தெரிவித்து உள்ளனர்.

பி.சி.சி.ஐ., மற்றும் ஐ.சி.சி.யின் நிர்வாகிகள் கிரிக்கெட்டை ஒலிம்பிக்கில் இடம்பெறச் செய்யத்தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஆஸ்திரேலியாவின் முன்னாள் விக்கெட் காப்பாளரான கில்கிறிஸ்ட் தெரிவித்து இருந்தார். இதற்கு பல வீரர்கள் ஆதரவு தெரிவித்து உள்ளனர்.

இது குறித்து இந்திய வீரர் கங்குலி கூறுகையில்,'' கிரிக்கெட்டை உலக அளவில் பிரபலப்படுத்த வீரர்கள் உதவி செய்யவேண்டும்.'' - என்றார். இதே கருத்தை லக்ஸ்மனும் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வீரர் யுவராஜ் இது குறித்து கூறுகையில்,'' இந்தியாவில் மக்கள் அதிகம் கிரிக்கெட்டை நேசிக்கிறார்கள். இந்நிலையில் ஒலிம்பிக்கில் இடம் பிடித்தால் அது மிகப்பெரிய பெருமை.'' - என்றார்.

இலங்கையின் சங்ககார கூறுகையில், ''கில்கிறிஸ்ற்றின் கருத்துடன் எனக்கு உடன்பாடு இல்லை. 2020ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில்தான் ருவென்ரி/20 கிரிக்கெட் இடம் பெறவேண்டும் என்பது நாள்களைக் கடத்தும் செயல். ஆனால், விரைவில் இதற்கான வேலைகளைத் தொடங்கவேண்டும்.'' - என்றார்.

# தமிழகக் கரையோரச் சதுப்பு நிலக் காடுகளில் புலிகளுக்குக் கடத்தவென ஆயுதங்கள் புதைப்பாம்!

ராமநாதபுரம், ஓக.7

விடுதலைப் புலிகளுக்குக் கடத்துவதற்காக தமிழகக் கடற்கரைச்சதுப்பு நிலக்காடுகளில் புதைக்கப்பட்டுள்ள ஆயுதங்களைக் கண்டுபிடிக்க சிறப்புப் புலனாய்வுப் பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருச்சியிலிருந்து தேவிப்பட்டினம் வழியாக விடுதலைப் புலிகளுக்குப் பொருள்களைக் கடத்திய நான்கு பேரை விசேட பிரிவுப் பொலிஸார் கைதுசெய்தனர். இவர்களில் நவீன் என்பவர் புலிகள் இயக்கத்தில் 10 ஆண்டுகள் பணியாற்றியதாகவும், தமிழகத்திலிருந்து பொருள்களைக் கடத்த, அகதியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு புலிகளால் அனுப்பி வைக்கப்பட்டவர் என்பதும் விசாரணையில் தெரியவந்தது.

இவரிடம் நடத்திய விசாரணைக்குப்பின் தேவிப்பட்டினம் சதுப்பு நிலக் காடுகளில் புலிகளுக்கு ஆயுதங்கள் பதுக்கி வைத்திருக்கும் தகவல். உறுதிசெய்யப்பட்டது. இதைக் கண்டுபிடிக்க மதுரையிலிருந்து சிறப்புப் புலனாய்வுப் பிரிவினர் (எஸ்.ஐ.யு.) தற்போது தேவிப்பட்டினத்தில் முகாமிட்டுள்ளனர். இது தவிர 'கியூ' பிரிவு மற்றும் விசேட பிரிவுப் பொலிஸாரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் சதுப்பு நிலக் காடுகள் ராமநாதபுரம் மாவட்டத்தில் பண்ணைக்குளம் முதல் நம்புதாளை வரை 55 கிலோமீற்றர் பரந்து விரிந்துள்ளன. இந்தக் காடுகளில் பாம்குரோவ் மரங்கள், றால் பண்ணைகள், உப்பளங்கள் பெருமளவில் உள்ளன.மேடு பள்ளங்கள் நிறைந்துள்ள இங்கு படகுகளை நிறுத்தி வைப்பது எளிது என்பதால், இந்த இடத்தை விடுதலைப் புலிகள் தேர்வு செய்துள்ளனர். இதே பகுதியில் உள்ள அழகன் குளத்தில்தான் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## பாராட்டி வாழ்த்துகிறோம்



மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீவிரகத்திப்பிள்ளையார் கோயில்புனரமைப்புக்கு நிதியுதவியளித்த சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும் வடமாகாண விஷேட செயலணிக் குழுத்தலைவருமான

கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா

அவர்கள் நீண்டகாலம் சகல சிறப்புடன் வாழவும் அடுத்த பொதுத் தேர்தலில் பல உறுப்பினர்களுடன் நாடாளுமன்றம் சென்று தமிழ் மக்களின் நலனுக்கு பாடுபடவும் ஸ்ரீவிரகத்திவிநாயகப்பெருமானை அபரிமிதமாகப் பிரார்த்திக்கின்றோம்.

(77015)

புனருத்தாரணசபை,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.


# ருவண்டா இனப்படுகொலைகளில் பிரான்ஸ் துருப்புக்கள் நேரடிப்பங்கு

## விசாரணை ஆணைக்குழு குற்றச்சாட்டு



''1994 ஆம் ஆண்டு ருவண்டாவில் இடம்பெற்ற இனப்படுகொலையில், பிரான்ஸ் முக்கிய பங்கு வகிக்கின்றது'' என, ருவண்டா சுதந்திர விசாரணை ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது. இப்படுகொலைகளில் பிரான்ஸ் துருப்புகள் நேரடியாகப் பங்குபற்றியுள்ளன என்றும் இக்குழு அதன் அறிக்கையில் சுட்டிக்கா ட்டியுள்ளது.

இப்படுகொலைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டமையை பிரான்ஸ் நன்கு அறியும். அத்துடன் இப்படு கொலைகளில் ஈடுபட்ட ஹூட்டு போராளிகளுக்கு பிரான்ஸ் துருப்புகள் பயிற்சியளித்து வந்துள்ளன என்றும் ஆணைக்குழு அறிக்கையில் குற்றஞ் சுமத்தியுள்ளது.

''இந்த இனப்படுகொலைகளின் போது 800,000 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இக்கொலைகள் தொடர்பாக, 33 சிரேஷ்ட பிரான்ஸ் இராணுவ அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்'' என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி பிராங்கோயி ஸ்மிட்டரண்ஸ்டின் பெயரையும் மேற்படிகுழு குறிப்பிட் டுள்ளது. அத்துடன் அப்போதைய பிரதமர் எடாம் பலடூர், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலேய்ன் ஜூப்பி, அவரது அப்போதைய பிரதம உதவியாளர் டொமினிக் டி விலிபன் ஆகியோரது பெயர்களையும் குழு பிரஸ்தாபித்துள்ளது.

1994 ஆம் வருடத்தில், 100 நாள்களில் 800,000 சிறுபான்மையினரான டுட்டு இன மக்களும், மிதவாத ஹூட்டு இனத்தினரும், ஹூட்டு தீவிரவாதப் போராளிகளால் கொன்று குவிக்கப்பட்டுள்ளார்கள். அச்சமயம் ஹூட்டு அரசுக்கு, அரசியல், இராணுவ, இராஜதந்திர ரீதியாக பிரான்ஸ் பெரிதும் உதவி வந்துள்ளது. இதர உதவிகளையும் வழங்கியுள்ளது.

படுகொலைகளை மேற்கொண்ட ஹூட்டு போராளிகளுக்கு பிரான்ஸ் பயிற்சியளித்துள்ளது. இனப் படு கொலைத் திட்டத்தை உருவாக்க உதவியுள்ளது. படுகொலைகளிலும் நேரடியாகப்பங்கு பற்றியுள்ளது என்றும் சுதந்திர விசாரணை ஆணைக்கு மேலும் அதன் அறிக்கையில் விவரித்துள்ளது.


## உடன் தேவை

யாழ்.நகரப் பகுதியில் உள்ள நிறுவனத்திற்கு கணனி ரைப்செற்றிங்(Type Setting)செய்வதில் தேர்ச்சி உடைய (பெண்) ஒருவர் தேவை.

ரூபா 8000/= வழங்கப்படும்

தொடர்பு- தொ.பே.:0776510149


## மரண அறிவித்தல்

### அருளப்பு என்சிலி மகாராஜா (கிளி)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் இல. 64/1, புகையிரத ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு என்சிலி மகாராஜா (கிளி) நேற்றுமுன்தினம் 05.08.2008 செவ்வாய்க்கிழமை மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு-றோசை தம்பதியரின் அன்பு மகனும் மெற்றில்டாவின் (சுசிலா) அன்புக் கணவரும் யான்சன்(சீறா ரெலிகொம், சுன்னாகம்), யான்சி, கௌசிகன், கௌசீலன்(யா/மத்திய கல்லூரி), கௌறீசன்(யா/மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அருளப்பு - கிளாறம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவரான அமலதாஸ் மற்றும் தியறோடா புனிதசிலி(சூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பெனடிக்(பிரான்ஸ்), டொமினி, மேரியோசேப்பின், டோனாஸ்(பிரான்ஸ்),டொனால்ட் (சூரி-கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் லூர்த்து நாயகத்தின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இன்று(07.08.2008)வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருப்பலி நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64/1, புகையிரத ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777 245207,
0774397176

(77018)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்படையைக் கண்டித்து நாளை அ.தி.மு.கவினர் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஓக. 7

ராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவதைக் கண்டித்து நாளை அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கச்சதீவை தாரைவார்த்துக் கொடுத்த தன் விளைவாக மீனவ மக்கள் பெரும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். கடந்த மூன்று தினங்களாக ராமேஸ்வரம் பகுதியில் உள்ள மீனவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாத அளவிற்கு இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கடந்த 31ஆம் திகதி 600 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் ராமேஸ்வரம் மீனவர்கள் கச்சதீவு அருகே இந்திய எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களை சுற்றி வளைத்து அவர்களைத் தாக்கியதோடு மட்டுமல்லாமல் படகுகளில் இருந்த மீன்களையும் பறித்துக் கொண்டதாக தகவல்கள் வந்துள்ளன.

இது போன்ற நிலைமை தொடர்ந்து நீடித்தால் ஒரு மிகப்பெரிய தொழிலை தமிழ் நாடு இழக்க வேண்டி வரும். இலங்கை கடற் படையினரின் இது போன்ற தொடர் தாக்குதலை இனி சகித்துக் கொள்ள முடியாது.

மத்திய, மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ராமேஸ்வரம் மீனவர் கள் மீது தொடர் தாக்குதல் நடத்தும் இலங் கைக் கடற்படையினரின் அத்துமீறிய செயலைக் கண்டித்து ராமநாதபுரம் மாவட்ட அ. தி. மு. க. சார்பில் எதிர்வரும் 8 ஆம் திகதி(நாளை) வெள்ளிக்கிழமை, காலை 10.00 மணியளவில் ராமேஸ்வரம் பாண் டியன் திடலில் மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெறும். - என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ரவூஹக்கீம் கொழும்பில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட சார்க் நாடுகளின் தலைவர்கள் இலங்கையில் இடம்பெறு கின்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றியோ அல்லது அரச பயங்கரவாதம் பற்றியோ எதுவும் பேசவில்லை. இது எம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றது. இவை குறித்துப் பேச இடமளிக்கப்படவில்லையா? என்று கேட்டார்.

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்றுக் கலநது கொண்டு அவர் உரையாற்றிய போது மேலும் கூறியவையாவது:-

கிழக்கில் ஆயுதக் குழுவொன்றை உருவாக்கி அரசு அதை வளர்த்து வருகிறது. அரசின் தேவைகள் அந்தக் குழுவின் ஊடாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இந்த ஆயுதக்குழு ஏறாவூர் பகுதியில் பல முஸ்லிம் இளைஞர்களை வெள்ளை வானில் கடத்திச் சென்று அவர்களைக் கடுமையாகத் தாக்கிய பின்னர் விடுவித்திருக்கின்றது.

இதன் காரணமாக ஏறாவூரில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் இளைஞர்கள் இதனால் நடமாடப் பயப்படுகின்றனர்.

முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்படுகின்றபோது அமைச்சர் அமீர் அலி தலையிட்டு தான் விரும்புகின்றவர்களை மாத்திரம் விடுவித்துக் கொடுக்கின்றார்.

அப்படியாயின் இந்தக் கடத்தலுடன் அரசுக்குத் தொடர்பிருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

இந்த மாதிரியான மனித உரிமை மீறல்கள் மற்றும் அரச பயங்கரவாதம் பற்றி கொழும்பில் இடம்பெற்ற சார்க் மாநட்டில் சார்க் நாட்டின் தலைவர்கள் பேசவில்லை.

(அ-சி)


மாபெரும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

நல்லைக் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு எமது உற்சவகால விற்பனை நிலையம் வழமைபோல் நல்லூர் சிவன் கோயிலுக்கு முன்பாக கொடியேற்றம் தொடக்கம் தீர்த்த உற்சவம் வரை திறந்திருக்கும் என்பதை முருகன் அடியார்களுக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சமயம், இலக்கியம், மருத்துவம், விஞ்ஞானம், அறிவியல், சோதிடம், யோகாசனம்

மற்றும் பிரபல முன்னணி நாவலாசிரியர்களின் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் அகராதிகள் கலைக்களஞ்சியங்கள், Dictionary வகைகள், சிறுவர் நூல்கள் உள்ளிட்ட பாடப் புத்தகங்களும் ஒரே இடத்தில் அமைதியான சூழலில் நீங்களே பார்த்து தெரிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகள், நூல் நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பிரதேச சபைகள், நகரசபைகள் போன்றவை மற்றும் வியாபாரிகள் மொத்தமாக கொள்வனவு செய்யும் போது விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
நல்லூர் உற்சவகால விற்பனை நிலையம்,
நல்லூர் சிவன் கோயில் முன்பாக.


## விடுதலைப்புலி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அந்தக் ஹெலிகொப்டர் இயந்திரக் கோளாறு காரணமாகவே தரையிறக்கப்பட்டதாக விமானப் படைப் பேச்சாளர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பிற்பகல் 2 மணியளவில் மன்னார் அரிப்புப் பகுதியில் உள்ள கடற்படைத் தளத்தில் தரையிறக்கப்பட்ட ஹெலிகொப்டரில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறை விமானப் படையினர் தற்போது சீர்செய்து வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## மருமாதா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வெளிமாவட்டங்களிலிருந்து யாத்திரிகர்கள் வருவதற்கான வசதிகள் எவையுமில்லை. இதனால் வருடாந்த உற்சவம் இடம்பெறாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மடுத் தேவாலயப் பகுதியை சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்துவது குறித்த உறுதி மொழியை அரசு வழங்கவில்லையெனவும் வழமையான ஆராதனைகள் இடம்பெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-சி)

## நாயாறுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் புதன்கிழமை முற்பகல் நாயாற்றுப்பகுதி மக்கள் குடியிருப்புகள் மீதும் பிற்பகல் 2.30 மணிக்கு உடுப்புக்குளம் மக்கள் குடியிருப்புக்கள் மீதும் வான்படையின் விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தின. இதன்போது 18 அப்பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில் அ.தியோகுப்பிள்ளை என்பவரின் வீடும் கடையும், ச.யசிகரன், த.அம்பிகாபதி, த.சாம் இராஜேந்திரன் ஆகியோரின் வீடுகளும் முற்றாக அழிந்துள்ளன. பத்து வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் அப்பகுதியில் உள்ள உடுப்புக்குளம் பொதுநோக்கு மண்டபம் ஒன்றும் சேதமாகியுள்ளது.

இதேவேளை, நேற்றுப் பிற்பகல் நாயாறுப் பகுதி நோக்கி படையினர் செறிவான ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் முல்லைத்தீவு கள்ளப்பாட்டிலிருந்து நேற்று கடற்றொழிலுக்குச் சென்ற அன்ரனி ஜெராட் என்பவர் கடலில் வலைபடுத்திருந்த நிலையில் கடற்படையினர் இரு டோறாப் பீரங்கிப்படகுகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலையடுத்து அவர் வலைகளை வெட்டிவிட்டு குறுகிய இடைவெளியில் தப்பிக் கரை சேர்ந்தார் எனவும் கூறப்படுகிறது.


THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA

| CHEMISTRY 2010 வெப்ப இரசாயனம் | CHEMISTRY 2009 சேதன இரசாயனம் |
| --- | --- |
| ஆரம்பம்: 09.08.2008 | ஆரம்பம்: 09.08.2008 |
| Sat., Sun. 4- 6 p.m. | Sat., Sun. 11-12.30 p.m. |
| BY:RAJAH | BY:RAJAH |

வெற்றி வழி தமிழ் இலக்கணப் பயிற்சி நூல் (தரம் 11 முதல் 2010, 2009, 2008)

சகல தமிழ்பாட மாணவரும் இலகுவாகக் கற்கும் உத்திகளுடனும் சகல வினா விடைகளுடனும் ஆவணி மாத விடுமுறை வகுப்புகள்.

ஆரம்பம்: 2010, 2009 - 08.08.2008

வெள்ளி - 10.00 -12.00

BEACON பெருமாள் கோயிலடி


# இன்றைய ஆட்டங்கள்

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி, இலங்கை வங்கி என்பவற்றின் அனுசரணையுடன் 13ஆவது ஆண்டாக நடத்தும் லீக் முறையிலான தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட் டுக்கழக மைதானத்தில் (பத்திரகாளி கோயில் அருகாமை) இடம்பெறவுள்ள ஆட் டத்தில் அளவெட்டி பாரதி வி.கவும் சுதுமலை யுவசக்தி வி.கவும் மோதுகின்றன. (1-86)

* * *

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி வடக்கு ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு அராலி ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

* அராலி சில்வெஸ்ரார் வி.க 'பி' அணி எதிர் வட்டுக்கோட்டை சிவன் வி.க 'பி' அணி.

* மானிப்பாய் ரெட்றேஞ்சர் வி.க. அணி எதிர் அண்ணா வி.க. 'எ' அணி.

* * *

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்திவரும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* பி.ப. 3.30 மணி கொற்றாவத்தை சிவானந்தா வி.க. எதிர் கரவெட்டி கலட்டி ஐக்கிய வி.க. * மாலை 4.30 மணி - அல்வாய் மனோகரா வி.க. எதிர் வதிரி பொமோர்ஸ் வி.க.

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

எமது நாடு இப்போது பாரிய பயங்கரவாதப் பிரச்சினை ஒன்றை எதிர்நோக்கி வருகிறது. இதை ஒழித்துக்கட்ட நாம் எல்லோரும் ஒன்றிணைந்து நிற்கிறோம். ஆனால் புலிகளின் நண்பர்கள் மாத்திரம் பயங்கர வாதத்தை ஒழித்துக் கட்டும் படை நடவடிக் கையைத் தடுக்க முற்படுகின்றனர்.

புலிகள் சர்வதேசத்தின் முன்பாக தங்களை நல்லவர்கள்போலக் காட்டுவதற்காக சார்க் மாநாட்டை ஒட்டி யுத்த நிறுத்த அறிவிப்பை விடுத்தனர். பின்னர் அவர்களே அதை மீறினர்.

2002 இல் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதிலிருந்து புலிகள் இந்த ஒப்பந்தத்தை மீறியே வந்தனர்; அவர்களின் சுபாவம் அது.

யுத்தத்தில் தோற்கும்போது சமாதானத்தின் ஊடாகவும் சமாதானத்தில் தோற்கும் போது யுத்தத்தின் ஊடாகவும் தம்மை பலப்படுத்தவே புலிகள் முயற்சிக்கின்றனர்.

தற்போது இந்தப் புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டும் படை நடவடிக்கை தொடர்கிறது. இதற்கு உரிய பலாபலன்கள் கிடைக்கும் நாள் நெருங்கி விட்டது. வெகு விரைவில் கிழக்கில் நடைபெற்றது போன்று வடக்கிலும் ஜனநாயகம் மலரும் - என்றார். (அ-சி)

## வெற்றிலைக்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியில் வீழ்ந்து வெடித்தன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இத்தாக்குதலில் அதே இடத்தைச் சேர்ந்த தங்கவேலு குணேந்திரராசா (வயது-29), முள்ளியானைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இரத்தினம் கணேசலிங்கம் (வயது-49) ஆகியோரே உயிரிழந்தனர். அதே இடத்தைச் சேர்ந்த கோபால கிருஸ்ணசாமி (வயது-47) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்தவர் ஆவார். பளை, இயக்கச்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகள் நோக்கி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணி தொடக்கம் 5.20 மணி வரை தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. (சி)

## சார்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகச் செய்திகள் பற்றி எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

"சார்க் மாநாட்டின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த விடயங்கள் அமுல்படுத்தப்பட்டத்தில் கடுமையான குறைபாடுகள் காணப்பட்டன என்பதை இந்தியத் தூதரகம் தெரிவிக்க விரும்புகிறது. முன்னர் தீர்மானிக்கப்பட்டபடி இவை அமுல்படுத்தப்பட வில்லை.

"இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இது குறித்து உடனடியாக ஆராயப்பட்டதுடன், மாற்று நடவடிக்கைகள் கூட்டாக மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பு விடயங்கள் குறித்து பகிரங்கமாக விவாதிப்பதை தூதரகம் விரும்பவில்லை.

'இலங்கைப் பாதுகாப்புப் படையினர் எம். கே. நாராயணனிடம் இதற்காக மன்னிப்புக் கேட்டு விட்டனர். அத்துடன் இந்த விடயம் முடிவடைந்து விட்டது என்று நாம் கருதுகிறோம்" - எனவும் தூதரகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)


அனைத்து தரப்பினருக்குமான ONLINE CLASSES அனைத்து நாட்களிலும் ஆரம்பம்

8.30a.m 10.30a.m 4p.m 2p.m 5p.m

Dip. In Visual Basic
Dip. In Internet e-mail
Dip. In Microsoft Office
Dip. In Desktop Publishing
Dip. In Hardware Engineering
Dip. In Computerized Accounting

பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறைக்கால பயிற்சிநெறிகள்

GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
Kids Programming (Year3-10)

Start on:09,11.08.2008

Softview Computer College
55, Arasady Rd, Jaffna. T.P: 021 2225170


## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தெரிவிக்கின்றனர். சுமார் 30 வரையான படையினரை ஏற்றிச் சென்ற 'ட்ரக்' இந்தத் தாக்குதலில் சிக்கி, தூக்கி வீசப்பட்டு சின்னாபின்னமாகிக் கிடந்தது என்றும் புலிகள் கூறுகின்றனர். காயமடைந்த படையினர் வெலிகந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எனினும், இந்தக் கிளைமோர் தாக்குதல் தொடர்பாகத் தகவல் வெளியிட்ட படைத்தரப்பு, ஆக ஒரேயொரு இராணுவ சிப்பாய் மாத்திரமே பலியானார் என்றும் மூவர் காயமடைந்துள்ளனர் என்றும் கூறுகிறது. மட்டக்களப்பு தொப்பிக்கல பிரதேசத்தை இராணுவத்தினர் கைப்பற்றியமைக்குப் பின்னர் - கடந்த சுமார் ஒருவருடகாலத்தில் - அங்கு படையினர் மீது நடத்தப்பட்ட முதலாவது பெரிய தாக்குதல் இது என்று கூறப்பட்டது. (சி)

## வவுனிக்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலில் 20 படையினர் கொல்லப்பட்டனர். ஐந்து படையினர் காயமடைந்தனர். இவர்களில் மூன்று உடல்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருக்கலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

57 ஆவது டிவிஷனின் உயர் தாக்குதல் வலுக் கொண்ட கொமாண்டோக்களே கொல்லப்பட்டுள்ளனர் எனவும் இதில் 30 படையினர் காயமடைந்தனர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. படையினர் இழப்புகளுடன் பின்வாங்கிய போது அவர்கள் மீது விடுதலைப் புலிகள் பதுங்கித் தாக்குதல் நடத்தினர்.

இச்சமரின் போது காயமடைந்த படையினரை ஏற்றியவாறு பின்னுக்குச் சென்ற படையினரின் வாகனம் புலிகளின் ஆர்பிஜி தாக்குதலுக்குள்ளானது. இதில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(அ-சி)


THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA.
2010 A/L
ஆரம்ப அலகில் இருந்து இணைந்த கணிதம் புதிய ஆரம்பம்
08.08.2008
Tue., Fri.
6 - 7.30 a.m.
BY:ஜங்கரன்

SHAMROCK
ரச்சமோட்டை, யாழ்.
A/L 2009
★ இந்து நாகரிகம்
வினா விடை வகுப்புகளும், அனைத்துப் பகுதி மீட்டலும்
திங்.,வெவ். - 4.30-6 p.m.
Mr.S.கார்த்திக் B.A.(Hons)
அரசியல் - Mr.T.கஜன்
A/L 2010 நடைபெறுகின்றது.

Microsoft Certified Software Developer(USA)
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gates இன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Computer Porgrammer, Software Developer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
Become a Software Developer
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.08.2008 08.00 a.m.
பதிவு செய்வோருக்கு விசேட சலுகைகள்
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விசேட பரீட்சை வெளியீடு - 04

ஆசிரியர்:-
திரு.எஸ்.ஏ.சந்திரபவன்,
புலமைப்புலரி வெளியீடு, கொழும்பு.



Model Examination For Grade Five Students for Selection to School and for the Award of Bursaries, August 2008

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம்-05 மாணவர்களுக்கு நடத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஒகஸ்ட் 2008

### வினாத்தாள் - I


மாணவர் சுட்டெண்:- .............................   நேரம்:- 45 நிமிடங்கள்

* முதலாம், இரண்டாம் வினாக்களில் முதல் இரண்டு உருக்களும் ஒரே வகையில் ஒற்றுமையுடையதாகவும், அடுத்த இரண்டு உருக்களும் இன்னொரு வகையில் ஒற்றுமையுடையதாகவும் காணப்படுகின்றன. ஒரு உரு மட்டும் எந்த உருவுடனும் ஒற்றுமையற்றுத் தனித்துக் காணப்படுகின்றது. அவ் உருவின் கீழ்க் கோடிடுக.

01. i) ii) iii) iv) v)



02. i) ii) iii) iv) v)




* 3 ஆம், 4 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள, ஐந்து சொற்களில் ஒத்த கருத்துச் சொற்சோடி ஒன்றும், எதிர்க்கருத்துச் சொற்சோடி ஒன்றும் உள்ளன. இவ் இரண்டு சோடிகளுடனும் பொருந்தாத ஒரு தனிச் சொல் காணப்படுகின்றது. அச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

03. i) விண்ணகம்   ii) மேடு   iii) மேகம்   iv) ஆகாயம   v) பள்ளம்

04. i) ஏற்றுதல்   ii) படித்தல்   iii) தூற்றுதல்   iv) கற்றல்   v) போற்றுதல்

* ஒரு மேசையில் A,B,C,D,E,F,G,H எனும் எட்டு நண்பர்கள் அமர்ந்திருந்து விருந்துண்ணுகின்றார்கள். உருவை அவதானித்து 5ஆம், 6ஆம் வினாக்களுக்கு விடை தருக.




05. A யின் வலதுகைப் பக்கமாக A யிலிருந்து நான்காவதாக இருப்பவர் யார்?   (............)

06. C யிற்கு இடதுபக்கமாகவும் G யிற்கு வலது பக்கமாகவும், C யைவிட G யிற்கு அண்மையிலும் இருப்பவர் யார்?   (............)


* 07 ஆம் வினா தொடக்கம் 10 ஆம் வினா வரை சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

07. ஒரு மேசையில் இருந்து விருந்துண்ணும் மூவரில் ஒருவர் மற்றைய இருவரினதும் நண்பராவார். அவர்களில் ஒருவர் மற்றையவரின் உடன்பிறந்த சகோதரன் ஆவாளர். ஆகவே, அதில் இருப்பவர்களில் எவராவது இருவரினது உறவு முறை பின்வருவனவற்றுள் எது?
i) அண்ணன் - தம்பி.   ii) நண்பன் - நண்பி   iii) அண்ணன் - நண்பன்

08. ஒரு மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையத்தில் 17 புதிய மோட்டார் சைக்கிள்கள் நிற்கின்றன. அவற்றில் கறுப்பு, நீலம், சிவப்பு, பச்சை ஆகிய நான்கு நிறங்கள் மட்டுமே உள்ளன. நிரோஷன் அவற்றில் ஒன்றை பணம் கொடுத்து வாங்கிய பின், அனைத்து நிற மோட்டார் சைக்கிள்களும் சம எண்ணிக்கையில் இருந்தன. நிரோஷன் வாங்கியது பச்சை நிறம் ஆயின், அங்கு நின்ற நீலநிற மோட்டார் சைக்கிள்கள் எத்தனை?
i) மூன்று   ii) நான்கு   iii) ஐந்து


09. 500 ரூபாயில் உள்ள 50 ரூபாய்களின் எண்ணிக்கைக்கு, 100 ரூபாயில் உள்ள 10 ரூபாய்களின் எண்ணிக்கை -
i) சமனற்றது   ii) சமனானது   iii) கூடியது.

10. ஒரு கடிகாரம் எத்தனை மணியோ, அத்தனை தடவை ஒலிக்கும். (உதாரணமாக 4 மணியைக் குறிப்பதற்கு 4 தடவை மணியொலிக்கும்) அத்தோடு, ஒவ்வொரு அரைமணி நேரத்தையும் குறிப்பதற்கு ஒரு தடவை மணி ஒலிக்கும். எனவே, அக்கடிகாரம் தொடர்ந்து ஒரு தடவை மணி ஒலிக்கும் மூன்று சந்தர்ப்பங்களும் எவை?
i) 1 மணி, 2 மணி, 3 மணி   ii) 12 மணி, 12.30 மணி, 1 மணி
iii) 12.30 மணி, 1 மணி, 1.30 மணி



11. இவ்வுருவில் அவதானிக்கக்கூடிய கோணங்களில் அதிகமாக உள்ள கோணம்
i) செங்கோணம்   ii) கூர்ங்கோணம்   iii) விரிகோணம்


12. கீழுள்ள உருக்களில் ஒரு வட்டம் அமைப்பதற்குத் தேவையான துண்டங்களைக் கொண்ட விடை எது?




i) BDE
ii) CDF
iii) AED



* எதிரேயுள்ள கோட்டு உருவை அவதானித்து, அது தொடர்பான வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.




13. சதுரத்திற்கு மட்டும் உருத்துடைய எழுத்துக்கள் இரண்டும் எவை?
i) DG   ii) EG   iii) EF

14. வேறு உருக்களிற்கும், செவ்வகத்திற்கும் பொதுவான எழுத்துக்கள் இரண்டும் எவை?
i) BD   ii) CD   iii) CB

15. ஒரு குறித்த நேரத்திலுள் வீதியில் சென்ற வாகனங்களின் ஒழுங்குமுறையில், பேருந்து : கார் முறையே 8 இற்கு 4 ஆகவும்; ஆட்டோ : மோட்டார் சைக்கிள் முறையே 16 இற்கு 8 ஆகவும் இருந்தன. எனவே கார்: மோட்டார் சைக்கிள் முறையே அமையும் விடை யாது?
i) 8 இற்கு 4   ii) 4 இற்கு 8   iii) 8 இற்கு 16


16. கப்பல்கள் எதுவுமற்ற ஒரு துறைமுகத்தில், முதல் 10 நிமிடத்தில் 8 கப்பல்கள் வந்து சேருகின்றன. அவற்றில் 4 கப்பல்கள் வெளியேறுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு 10 நிமிடத்திற்கும் இதே ஒழுங்குமுறையில் நடைபெறுமானால், ஒரு மணித்தியாலத்தின் முடிவில் துறைமுகத்தில் நிற்கும் கப்பல்களின் எண்ணிக்கை யாதாக இருக்கும்?
i) 60   ii) 24   iii) 40

* ஒரு செங்கற் சூளையில் கட்டட வேலைக்காக செங்கற்கள் எடுக்கப்பட்டுக்கொண்டிருந்தன. 3 தொழிலாளிகளும் சேர்ந்து முதல் தடவையில் 18 செங்கற்களையும், இரண்டாவது தடவையில் 15 செங்கற்களையும், மூன்றாவது தடவையில் 12 செங்கற்களையும் எடுத்துச்சென்றனர். ஒவ்வொரு தடவையும் 3 தொழிலாளிகளும் சம எண்ணிக்கையான கற்களையே எடுத்துச் சென்றனர்.

17. ஒரு தொழிலாளி 3 தடவைகளிலும் எடுத்துச்சென்ற செங்கற்களின் மொத்த எண்ணிக்கை யாது?
i) 15   ii) 18   iii) 21


18. முதற் தடவை எடுத்துச்சென்ற செங்கற்களில் 1/6 பங்கு எண்ணிக்கையானவை உடைந்துவிட்டன. எனின், உடைந்த கற்களின் எண்ணிக்கை யாது?
i) 2   ii) 3   iii) 4

19. இவ் விளக்கப்படம் உணர்த்தி நிற்கும் சரியான கூற்றைத் தெரிவு செய்க.





i) A மிருகங்கள் - B மனிதர்கள் - C விலங்குகள் - D பெண்கள்
ii) A விலங்குகள் - B மிருகங்கள் - C பறவைகள் - D புறாக்கள்.
iii) A பிராணிகள் - B பறவைகள் - C மிருகங்கள் - D புறாக்கள்.

20. கீழுள்ள தராசில் இரு பக்கங்களிலும் உள்ள பொருட்தொகுதிகள் சம நிறையுடையவை. அவற்றின் அடிப்படையில் கீழே கூட்டினுள் உள்ள தராசினை சமப்படுத்துவதற்கு A பக்கத்தில் வைக்கப்படவேண்டிய உருத்தொகுதி எது?





21. கீழுள்ள உருவில் வினாக்குறி (-?-) இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய பகுதி எது?




22. அருகே உள்ள எண்களாலான கோலத்தை அவதானித்து, வினாக்குறி (-?-) இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய எண் யாது?
i) 15   ii) XV   iii) XXV

| | | |
|---|---|---|
| 20 | V | XV |
| V | | V |
| ? | V | 20 |

* கீழே உள்ள கோட்டு உருவின் விளக்கத்தின் அடிப்படையில் விடை தருக.





23. A,B,C ஆகிய கூடுகளில் இடம்பெறக்கூடிய பொருத்தமான சொற்தொகுதி எது?
i) அரிசி - கடதாசி - விதைநெல்
ii) நெல் - கடதாசி - அரிசி
iii) அரிசி - விதை - கடதாசி

24. கூடு C கடதாசி ஆயின், கூடு D யினுள் இடம்பெறக்கூடிய பொருத்தமான சொல் யாது?
i) புத்தகம்   ii) பென்சில்   iii) சட்டை


* 25 ஆம், 26 ஆம் வினாக்களில் அடுத்து வரும் உருவை தெரிவு செய்க.

25.






26.





27. கீழே உள்ள உருவை நன்கு விபரிக்கும் விடையினைத் தெரிவுசெய்க?



i) பாம்பு ஒருவரை கொத்துகின்றது.
ii) பாம்பாட்டி வித்தைகாட்டுகின்றார்.
iii) பாம்பு வயோதிபரை படமெடுக்கின்றது.

28. உரு "X' இல் மனிதனால் A யில் விசை பிரயோகிக்கப்படும் போது, B யானது இடஞ்சுழியாகச் சுழலும்; அப்போது C மேல் நோக்கி எழும். அப்படியாயின்; உரு 'Y' இல் A யில் மனிதனால் பிரயோகிக்கப்படும் போது, B, C யின் செயற்பாடுகள் யாவை?
i) B வலஞ்சுழியாகச் சுழலும் C மேல் நோக்கிச் செல்லும்.
ii) B இடஞ்சுழியாகச் சுழலும் B மேல் நோக்கிச் செல்லும்.
iii) B வலஞ்சுழியாகச் சுழலும் C கீழ் நோக்கிச் செல்லும்.




29.




இவ் உருவிற்கு மிகவும் பொருந்தும் வகையில் அமைந்த விடையைத் தெரிவு செய்க.
i) ஒருவர் சாதாரண உடற்பயிற்சியில் ஈடுபடுகின்றார்.
ii) ஒருவர் கடின உடற்பயிற்சியில் ஈடுபடுகின்றார்.
iii) ஒருவர் ஒரு விளையாட்டில் ஈடுபடுகின்றார்.

30. ஒரு கோள உருவின் ஒருபக்கத்தோற்றமே இங்கு தெரிவதாகும். எனவே, இக்கோள உரு முழுவதிலும் இது போன்ற நிழற்றிய துண்டங்கள் எத்தனை உள்ளன?
i) 6   ii) 12   iii) 24




31. முழு உருவிலும் உள்ள மொத்தத் துண்டங்கள் எத்தனையாகும்?
i) 6   ii) 12   iii) 24

32. முதலில் உள்ள உருவில் வினாக்குறி (-?-) இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய பகுதி எது? (...............)




33. கீழுள்ள உருவின் போக்கை அவதானித்து, அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.




* கீழ்வரும் கூற்றுக்கள் சரியானவையாயின் (சரி) எனவும், தவறாயின் (தவறு) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள் எழுதுக.

34. செடிகளில் பூக்கும் எல்லா மலர்களும் நிறமும் மணமும் கொண்டவையாகும். (.....................)

35. பகல், இரவாக மாறுவதற்கு பூமி சுழல்வதே காரணமாகும். (.....................)

36. ஏல்லாப் பறவைகளும் கூடுகட்டி, அதில் தமது வாழ்நாட்களைக் கழிக்கின்றன. (.....................)

* அறிவுறுத்தல்களுக்கு அமைய விடை தருக.

37. பால (..........)
பொருள் தரும் சொற்களைப் பெறுவதற்கு கூட்டினுள் உள்ள அடைப்பினுள் இடக்கூடிய எழுத்துக் கூட்டம் எது?
i) ன்,ல்,ர்   ii) ம்,ர்,ன்   iii) ய்,ர்,ன்

* 'பத்திரிகை" எனும் சொல்லில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடைகளை இரண்டெழுத்துச் சொல்லில் எழுதுக.

38. விளக்கு எரிவதற்கு இது அவசியமாகும். (..............................)

39. குதிரையின் ஒத்த சொல் இதுவாகும். (..............................)


40. தலைவன், இடம் ஆகிய பொருள்களில் வரும் சொல். (..............................)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

மாணவர் சுட்டெண்:- ............................ நேரம்:- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

* கீழ்வரும் வடிவங்கள் தொடர்பான வினாக்களுக்கு விடை தருக.




01. மேலுள்ள A,B,C,D ஆகிய உருக்களின் சுற்றளவுகளைத் தனித்தனியாகக் கீழே எழுதுக.

அ) A ............ cm  B ............ cm  C ............ cm  D ............ cm

ஆ) A,B ஆகிய உருக்களின் பரப்பளவுகளைக் கீழே எழுதுக.

i) A ............ சதுர செ.மீ  ii) B ............ சதுர செ.மீ

இ) i) சுற்றளவு கூடிய உரு எது? (............)

ii) சுற்றளவு குறைந்த உரு எது? (............)

ஈ) i) A,B ஆகியவற்றின் பரப்பளவுகளின்படி A, உருவின் பரப்பளவு B உருவின் எத்தனை மடங்காகும்? (............)

ii) மிகக் கூடிய சுற்றளவில் இருந்து மிகக் குறைந்த சுற்றளவைக் கழித்து எழுதுக? (............)

iii) B,C ஆகியவற்றின் சுற்றளவுகளைக் கூட்டி எழுதுக? (............)

iv) B உருவில் ஒரு சென்ரிமீற்றர் நீளம், ஒரு சென்ரிமீற்றர் அகலம் கொண்ட எத்தனை துண்டுகள் வெட்டிப் பெறலாம்? (............)

v) மூலைகளைத் தொடுக்கும்போது குறைந்தளவு முக்கோணிகள் கிடைக்கும் உரு மேலுள்ள உருக்களில் எது? (............)

02. கீழுள்ள துண்டுப்பிரசுரத்தை வாசித்து, அது தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> அன்பார்ந்த பொதுமக்களே!
>
> **போர்மேகம் சூழ்கிறது - விழித்தெழுங்கள் !**
>
> நாட்டின் சமாதானப் புறாவிற்கு ஆபத்து நெருங்குகின்றது! அமைதி, சந்தோஷம், மத ஒற்றுமை, இன ஒருமைப்பாடு அனைத்தும் அஸ்தமித்துக் கொண்டு செல்கின்றன, மாறாக பயம், பீதி, துக்கம், கலகம், சஞ்சலம் ஆகியவை விரைவாக உதயமாகிக் கொண்டிருக்கின்றன.
>
> பொதுமக்களே ! சமாதானிகளே !
> சற்றும் தாமதியாமல் சமாதானத் தாயவளைக் காப்பாற்ற இன-மத-மொழி வேறுபாட்டைக் கடந்து
> "சுனாமிப் பேரலை போல" சுருண்டெழுந்து வாருங்கள்.
> "சாவுமணிக் கோபுரத்தில் சமாதானக் கொடி நாட்டுவீராக"!
>
> சமாதானப் பேரவை - இலங்கை

i) மேலுள்ள துண்டுப்பிரசுரத்தை விநியோகித்த அமைப்பு எது? ............

ii) துண்டுப்பிரசுரம் யாரை விழிப்படையச் செய்கின்றது? ............

iii) எதற்கு ஆபத்து நெருங்குகின்றதாகச் சொல்லப்படுகின்றது? ............

iv) நாட்டில் அஸ்தமித்துக் கொண்டு செல்கின்றவை எவையென எழுதுக. ............

v) நாட்டில் உதயமாகிக் கொண்டிருப்பவை எவையென எழுதுக ............

vi) துண்டுப் பிரசுரத்தில் 'சமாதானம்' என்னும் விடயம் இரண்டு இடங்களில் உருவகித்துக் கூறப்பட்டுள்ளது. அவ்விரண்டு உருவகச் சொற்களையும் எழுதுக.

i) ............ ii) ............

vii) துண்டுப் பிரசுரத்தில் ஓர் உவமை கூறப்பட்டுள்ளது. அவ்வுவமைத் தொடரினை எழுதுக. ............

viii) சுனாமிப் பேரலை கடந்து வந்த மூன்று வேறுபாடுகளும் எவை? ............

ix) சமாதானக் கொடியை எங்கே நாட்டுமாறு கேட்கப்பட்டுள்ளது? ............

x) "போர்மேகம் சூழ்கிறது" என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வதை எழுதுக? ............



03. கீழ்வரும் வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.

01) கொல்லர் கம்மாலையில் காணப்படும் ஒரு பொருள் பின்வருவனவற்றுள் எது?
i) தூக்குக்குண்டு  ii) சம்மட்டி  iii) மொங்கான்

02) மரப்பலகையினை அழுத்தமாக்கப் பயன்படும் கருவி எது?
i) உளி  ii) துறப்பணம்  iii) சீவுளி

03) பன்னவேலை செய்வதற்குரிய மூலப் பொருள் எது?
i) தங்கம்  ii) பனையோலை  iii) களிமண்

04) நெல் சூடடிக்கும் களத்தில் நெல்மணியின் பெயர் யாது?
i) பொலி  ii) சப்பி  iii) பதர்

05) களிமண்ணால் செய்யப்பட்ட மட்பாண்டங்களை சுடவைக்கும் இடத்தின் பெயர் யாது?
i) போறணை  ii) குகை  iii) சூளை

06) மீன் பிடிக்கும் வலையில் மீன்கள் ஒதுங்கும் இடம் எது?
i) அணியம்  ii) மடி  iii) கரைவலை

07) ஒரு கட்டடம் கட்டுவதன் ஆரம்பநிகழ்வாகக் கருதக்கூடியது எது?
i) பத்திரிப்பு போடுதல  ii) அத்திவாரம் இடுதல்  iii) அடிக்கல் நாட்டுதல்

08) பனை, தென்னைகளில் கள் சேகரிப்பவர் இடுப்பில் கட்டியிருக்கும் பெட்டியின் பெயர் யாது?
i) இரும்புப் பெட்டி  ii) இடுப்புப் பெட்டி  iii) இயனக்கூடு

09) பொற்கொல்லர் பவுணின் அளவைக் குறிக்க பயன்படுத்தும் ஒரு அலகு எது?
i) இஞ்சி  ii) கரெட்  iii) மஞ்சாடி

10) பனை மரம் போன்ற மரங்களை பிளப்பதற்குப் பயன்படும் எளிய கருவி எது?
i) வாச்சி  ii) ஆப்பு  iii) அரிவாள்

04. பின்வரும் தமிழ் மொழிச் சொற்களுக்கான ஆங்கிலச்சொல்லை எழுதுக?

i) ஆலயம் : ............  ii) பயணம : ............
iii) சமிக்ஞை : ............  iv) வட்டம் : ............

05. பின்வரும் ஆங்கில மொழிச் சொற்களுக்கான தமிழ் மொழிச்சொல்லை எழுதுக?

i) Social Services : ............  ii) Pavement : ............
iii) Come again : ............  iv) Light House : ............

06. நீரின் பயன்பாடுகள் தொடர்பான கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக?

மருந்து நீர் / பன்னீர் / மஞ்சள் நீர் / தண்ணீர்

i) குற்றம் நீங்குவதற்காக தெளிக்கப்படும் நீர் எது? (............)

ii) வாழையிலையில் உணவு பரிமாறுவதற்கு முன தெளிக்கப்படும் நீர் எது? (............)

iii) சித்திரைப் புதுவருடப் பிறப்பன்று தலையில் வைத்து நீராடும் நீர் எது? (............)

iv) மங்கள நிகழ்வுகளின்போது தலையில் தெளிக்கும் நீர் எது? (............)

07. கீழ்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களையும், தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களையும் எழுதுக.

i) திரிபந்த ............  ii) பூமிதல ............
iii) சிவப்பு நிறம் ............  iv) கண் ............


08. கீழ்வரும் கருவிகளின் பெயர்களை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அந்தந்தக் கருவிகளின் கீழ் எழுதுக.

(நுணுக்குக் காட்டி, அரிய இருவிழியான், வானியல்தொலைகாட்டி)



i) ............ ii) ............ iii) ............


09. கீழே சில காய்களின் நெடுக்கு வெட்டுமுகத்தோற்றம் காணப்படுகின்றன. அக்காய்களின்



i) ............ ii) ............ iii) ............



10. இந்த உருத்தொடர்பான கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.



இவ்வுருவின்,

i) பெயர் யாது? ............
ii) விளிம்புகள் எத்தனை? ............
iii) உச்சிகள் எத்தனை? ............
iv) முகங்கள் எத்தனை? ............

11. கீழே காணப்படும் பெரியார்களின் பெயர்களை அறிந்து எழுதி, அவர்கள் இருவருக்கும் பொருத்தமுடைய ஒவ்வொரு பணிகளைக் கீழ் உள்ள கூட்டில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

**தமிழ்ப்பணி, அரசியல்பணி, சமூகப்பணி, வைத்தியப்பணி**





பெயர் : ............
பணி : ............

பெயர் : ............
பணி : ............


12. கீழே கூட்டினுள் காணப்படும் சொற்களை ஆதாரமாகக் கொண்டு காளை மாட்டில் குறிக்கப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களுக்குரிய பகுதிகளைப் பெயரிடுக.

1) நாடை / ஏரி / குரை / தொடை





A ............ B ............
C ............ D ............

2)



i) இது பயணிக்கும் ஊடகம் எது? ............
ii) இது தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் உலோகம் எது? ............
iii) இது இயங்குவதற்குப் பயன்படும் சக்தி வலு எது? ............

13. கீழே காணப்படும் விளையாட்டினை அவதானித்து விடையளிக்குக.




i) இவ்விளையாட்டின் தமிழ்ப் பெயர் என்ன? ............
ii) படத்தில் காணப்படும் A,B,C ஆகியவற்றின் பெயர்களைத் தமிழில் எழுதுக. ............
iii) இவ்விளையாட்டில் ஒரு அணியில் எத்தனை பேர் விளையாடுவர்? ............

14. கீழே காணப்படும் வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

i) சாதாரண உடல்வெப்ப நிலையின் பெறுமானத்தை பரனைட்டில் தருக? (............)
ii) சுத்தத் தங்கம் (கலப்பில்லாத தங்கம்) எத்தனை கரட் ஆகும்? (............)
iii) புத்த பெருமானின் புனித தந்தம் பேணப்படும் தலம் எது? (............)
iv) இலங்கையில் யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது? (............)
v) டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பின் பெயர் ஒன்று எழுதுக? (............)

15. கீழ்வரும் கணிதப் பிரசினங்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

i) 500g பொதிகள் 5 உம், 150g பொதிகள் 6 உம், 300g பொதிகள் 2 உம் சேர்த்து ஒரு பொதியில் அடைத்தால், அப்பொதியின் மொத்த நிறை யாது? (............)

ii) 10kg வெள்ளை அரிசியின் விலை 480 ருபா ஆகும். எனவே, 2kg வெள்ளை அரிசியின் விலையைக் காண்க. (............)

iii) ஒரு கம்பத்திலிருந்து இன்னொரு கம்பத்திற்கு 100m மின்கம்பி தேவை. 1km தூரத்திற்கு மின் கம்பங்கள் நடப்பட்டு மின்கம்பி இணைக்கப்பட்டது. எனவே,

அ) எத்தனை மின் கம்பங்கள் தேவைப்பட்டிருக்கும்? (............)

ஆ) எத்தனை மீற்றர் மின்கம்பிகள் தேவைப்பட்டிருக்கும்? (............)

16. கீழுள்ள வாக்கியங்களை வாசித்து, அவற்றுடன் தொடர்புபடும் கருத்துள்ள ஆறு வாக்கியங்கள் எழுதுக.

அ) நாம் எஸ்கிமோவர் இனத்தைச் சேர்ந்தவர்கள்.  ஆ) எமது இருப்பிடம் பனிக்கட்டிப் பிரதேசம் ஆகும்.

இ) எங்களது வீடு கூட பனிக்கட்டிகளாலேயே அமைக்கப்பட்டுள்ளது. (தொடர்ந்து எழுதுக)

i) ............
ii) ............
iii) ............
iv) ............
v) ............
vi) ............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org